"MATHAR MARUMANAM."

மாதர் மறுமணம்



மலர் 3. இதழ் 10

பிரமாதி வைகாசி

Annas 1½. 10 Cts.

"மாதர் மறுமணம்" சந்தா விபரம்.

வருஷ சந்தா இந்தியா, சிலோன் முதலிய
உள்நாட்டுக்கு ... ரூ. 1—0—0

பர்மா, மலாயா, சைகோன், தென்னாபிரிக்கா முதலிய
வெளிநாட்டுக்கு ... ரூ. 1—8—0

தனிப்பிரதி ... ... ரூ. 0—1—6

வி. பி. மூலம் அனுப்ப இயலாது. முன்பண மாகவே செலுத்த வேண்டும். வெளிநாட்டிலுள்ளவர்கள் 2 ஷில்லிங் 6 பென்ஸ் அனுப்ப வேண்டும்.

விலாச மாறுதலுக்கு சந்தா எண்ணைக் குறிப்பிட்டு கடிதமெழுதவும் மாதிரிப்பிரதி வேண்டுவோர் $1\frac{1}{2}$ அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

காரியதரிசி,
மாதர் மறுமண சகாய சங்கம், காரைக்குடி

உள்ளுறை

மறுமணத்தின் நறுமணம் (பாட்டு)
— செட்டிமார் நாட்டு விகடன் 1
மொழியும் மாதரும் —டார்பன் திரு. ச. முனிசாமி பிள்ளை.... 3
பெண்கள் சுதந்திரம் (பாட்டு) 6
இந்திய மாதர் முற்போக்கு —லக்ஷ்மி 8
மாமியும் மருமகளும் —ப. நீலகண்டன் 13
நாடார் சமூகத்தினர்க்கு ஒரு வேண்டுகோள்
—மா. அ. பிச்சைமுத்து 16
வாழ்க்கைச் சுழல் —குன்றை மு. பேத்தய்யா 18
அபலையின் அவதி P. தனுஷ்கோடி 21
மறுமண நீதி (பாட்டு) M. K. சுதன் 26
சௌந்தரவல்லி C. N. விகடன் 28
லீலா சங்கர் (அம்புலிமான்) 30
மாதருக்கு விடுதலை (ஸ்ரீமதி கமலாதேவி) 34
காதலைத் தீய்த்த கட்டுப்பாடு (V. R. சந்திரன்) 37
நிகழ்ச்சிகள் 43

குமரன் புத்தகசாலை.

வ. உ. சிதம்பரம் பிள்ளை எழுதியது.

மனம்போல வாழ்வு	0-8-0
திருக்குறள் (அறத்துப்பால்)	1-0-0
மெய்யறம்	0-8-0
சாந்திக்கு மார்க்கம்	0-8-0
அகமே புறம்	0-8-0
மெய்யறிவு	0-8-0

வ. வே. சு. ஐயர் எழுதியது.

சந்திரகுப்த சரித்திரம்	0-6-0

இதர புத்தகங்கள்.

ஞான வாசிட்ட மூலமும் உரையும் 2 பாகமும்	6-0-0
நைடதம் மூலமும் உரையும்	4-0-0
சிதம்பர ரகசியம்	0-8-0
உப்பளா முற்றுகை	0-4-0
பக்தியோகம்	0-8-0
தேவோபாசன தீபம்	0-6-0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை (சீர்திருத்தக்கதை)	0-4-0
மநுநீதி மர்மம்	0-2-0
ரோமியோ ஜூலியட் (ஷேக்ஸ்பியர் நாடகக் கதை செய்யுள்)	0-4-0
இகபரஞானசாகரத் திரட்டு	0-6-0
பெரிய விக்கிரமாதித்தன் கதை	1-0-0
தாசிகள் மோச வலை (நாவல்)	1-4-0
நந்தனர் கீர்த்தனை	0-4-0
தோத்திரக்கோவை	0-6-0
இராமாயண ஆராய்ச்சி	0 4-0
சொர்னவல்லி	0-12-0
கூழைரங்கன்	0-12-0
அமிர்தவல்லிமாலை	0-3-0
நமது பலசரக்குக்கடை	0-6-0
நாயன்மார்	0-3-0
குட்டிச்சாத்தான் கட்டுரைகள்	0-3-0
பதிற்றுப்பத்தந்தாதி	0-3-0
மாதர்மறுமணம்	0-4-0
பத்மநாதன் அல்லது களவுபோன வைரப்பதக்கம்	0-12-0
மானநஷ்ட வழக்கு	0-1-0
ஜீவகாருண்யத் திருக்குறள்	0-6-0
ஜீவகாருண்யப்பாடல் திரட்டு	0-3-0
சந்திரமதி அல்லது தற்காலத்து தமிழ் மகள்	0-2-0
கைம்பெண்ணின் கண்ணீர்	0-1-0
தேசீய கீதங்கள்	0-2-0
காசில்லாமல் உபதேசம்	0-1-0
பலதிரட்டு	0-1-0
கடவுளும் கோயிலும்	0-1-0
சமரச சன்மார்க்க தோத்திரத்திரட்டு	0-4-0
சைவசமய சாரம்	0-1-0
சுயராஜ்யம் யாருக்கு?	0-1-0
மாதர் மறுமணப் பாடல் திரட்டு	0-2-0
அநியாயக் கல்யாணம்	0-0-6
இரண்டு கட்டுரைகள்	0-1-0
தமயந்தி நாவல்	0-8-0
சோதிடப் புரட்டு	0-2-0
சுயமரியாதைத் தாலாட்டு	0-2-0
புராண ஆபாசங்கள்	0-3-0
ராமலிங்க சுவாமி பாடல்	0-2-0
சுயமரியாதைத் தத்துவ கீதங்கள்	0-3-0
சுயமரியாதைப் பாடல்	0-2-0

மானேஜர், 'குமரன்' ஆபீஸ், காரைக்குடி.

மாதர் மறுமணம்.

பத்திராதிபர்:— மு. மரகதவல்லி.

மலர் 3 | காரைக்குடி பிரமாதி-ஹூ வைகாசி-மீ | இதழ் 10

மறுமணத்தின் நறுமணம்!

(செட்டிமார்நாட்டு விகடன்)

வித்தரிக்க முடியாத விண்மீன்கள் மினுமினுக்கி
சித்தரித்த வானமதில் சிங்காரத் தண்ணிலவு!

முத்தாரம் போல்மிளிரு முல்லைமலர் வாசனையை
வித்தாரமாக் கிடவே வீசுந்தமிழ்த் தென்றல்!

பதினொன்று மணிஇரவு பாருறங்கும் வேளையிலே
பதிமீதிற்றனியனாய் படுத்து விழித்திருந்தேன்!

விதியென்று மூடர்பலர் விபரீதஞ் செய்துவிட்ட
கதியற்ற கட்டழகி கைம்பெண்ணாள் காமாக்ஷி!

எழிலாகவந்து நின்று எந்தனிடஞ் சொல்லுகிறாள்:
விழித்துத்தா னிருக்காயோ? வீணனே நீயுமிப் போ

வழிசெய் வேனென்றுசொல்லி வருடங்கள்
கழித்துவிட்டாய்!

பழிகாரா உன்மனது பாராங்கல் லோபுகலு!

தாலியறுத்தெந்தனையே தடுமாறச் செய்துவிட்டார்!
கேலிமணங்கூடவுனை கிட்டிடவே யில்லையடா!

பாலியத்திற் பள்ளியிலே பழகிவிட்டநேசன் நீ!
வாலிபத்திலெந்தனுக்கு வந்ததடா ஆபத்து!

இந்நாளி லிவ்விடரை இக்கணமே களைந்துவிட்டு
பொன்னான வாழ்க்கையதை புவியிதில்நாம் பற்றிடுவோம்!

பன்னாளைக் கடத்தாதே பயந்து தொடை நடுங்காதே!
பின்னாளில்லுறுதியுளம் பெற்றிட நீ தயங்காதே!

சீர்திருத்தக்காரனென்று சீறுகிறாய் கூட்டமதில்
பார்! என்று வந்ததுமே பதுங்குகிறாய் வாட்டமதில்

பேர்பெற்ற வீரமிலாப் பேடியோ நீ ஆண்மகனோ?
பார் போற்றும் பாரதியார் பைந்தமிழின் தீரங்கொள்!

அடுக்குமொழிகளிலே அமைந்த நல்லநீதிகளே
திடுக்குறச்செய்தெனையே தீட்டியது சன்மார்க்கம்!

படுக்கைதனை விட்டெழுந்தேன் பத்தினியைத்
தானணைத்தேன்!
துடுக்குச் சமூகங்களின் தொந்தரவைத் தானழிப்பேன்!

என்றுமே கர்ச்சித்த இளஞ்சிங்கமென்னுடைய
குன்றினுயர் தோள்களையே குலுக்கிப் பிடித்திழுத்து

நன்றுநன்று பேஷெனவே நாட்டியமொன்றாடிவிட்டு
மென்றிடுமோர் பாவனையில் மேனியிலே முத்தமிட்டாள்!

புதுப்பருவ மங்கையவள் புன்முறுவல் சோலையிலே
மதுக்குடித்த வண்டெனவே மனமுருகிச்
சோர்ந்துநின்றேன்

அடுத்த சிலநாளில் அன்பர் பலர் சேர்ந்து
முடித்தார் மறுமணத்தை முதிர்ந்த மகிழ்ச்சியுடன்

குடித்தனம் செய்துவந்தோம் குவலயத்தோர் கண்காண
தடித்தன மூடர்சிலர் தகாதென்றுளறினர்காண்

படித்த சில நல்லறிஞர் பார்த்துவிட்டு எங்களையே
துடித்து மறுமணங்கள் தொடர்ந்து பலசெய்துகொண்டார்!

எங்களூர் திருந்தினது! எழில்நடனம் ஆடிற்று!
உங்களூர் சேதியென்ன? உண்மையைத் தானுரைப்பீர்!
சிங்கள்களாகிடுங்கள்! சிதைத்திடுங்கள் கைமையதை!
துங்கமுள்ள மறுமணத்தால்! துயர்போக்கி வாழ்ந்திடுங்கள்!

மொழியும் மாதரும்.

(டர்பன் திரு. ச. முனிசாமி பிள்ளை)

தமிழின் பெருமை

தமிழ்மொழியானது அளவிட்டுக் கூறுதற்கரிய காலந் தொட்டு வழங்கப்பட்டு வருகிறது. தலை, இடை, கடை என்னும் முக்கழகங்களாலும் ஆராயப்பட்டது. மூவேந்தரால் போற்றப் பட்டது. இயல்—இசை—நாடகம் என முக்கூறுடையதாய் வழங்கப்பட்டது. இலக்கண வரம்புடையது. இனிமையுடை யது. உயர்ந்த நாகரீகமுடையது. தமிழ்மொழியின் இலக்கண வரம்புபோல் வேறு எம்மொழியிலும் இல்லை என்பர். இன்பத்தில் உயர்ந்தது கல்வி இன்பம். இனிமையில் இனிமை செந்தமிழ் இனிமை. தமிழ் மொழியிலே சொற்சுவை, பொருட்சுவை ததும்பும் பாடல்கள் கடலெனப் பரந்து கிடக்கின்றன.

தாய் மொழிப் பற்று

ஒரு சமூகம் சிறந்து விளங்க வேண்டுமாயின், அச்சமூகம் கல்வி நாகரீகங்களிற் சிறந்து விளங்க வேண்டுமன்றோ? நாட்டு மக்கள் நன்னிலை அடைய வேண்டுமாயின் அவர் தம் தாய் மொழியைப் போற்றி வாழ்தல் வேண்டுமல்லவா? தாய் மொழி யைப் போற்றாத எந்த சமூகமும் முன்னேற்ற மடையமாட்டாது. தாய் மொழியைப் போற்றாதவர் தம்மை உணரமாட்டார்; தம் உரிமையுடன் வாழமாட்டார். சுய உணர்வுடன் இருக்கமாட் டார்; தாய் மொழியைப் போற்றி வாழும் நாடும் சமூகமுமே தலை சிறந்து விளங்குகின்றன என்பது வெள்ளிடை மலை.

தாய் மொழிமூலம் கல்விகற்று அறிவை வளர்ப்பது தாயா ரால் வளர்க்கப்படுவது போலாகும். ஆகையால் கல்வியறிவுள்ள தாய்மாரால் வளர்க்கப்படும் குழந்தைகள் எளிதாக நன்னிலை யடைவர். தமிழ்த் தாயானவள் கல்வி, வீரம், ஞானம் முதலான அருங்குணங்கள் ஒருங்கமையப் பெற்ற நற்றாயாய் விளங்குவா ளானல், நாமேன் பிறரால் வளர்க்கப்பட வேண்டும்?

தமிழ்க் கல்வியே தமிழ்ப் பெண்களுக்குரிய கல்வியாகும். அதுவே அவர்களுக்குத் தகுந்த அறிவையும் பெண்மைக் குணத்தையும் தருவதாகும். நமது சொந்தப் பழக்க வழக்கங்கள் மூலம் சீர்திருத்தமாய் வாழ்வதற்கும் தாய் மொழிக் கல்வியே சிறந்ததாகும். பண்டைக் காலத்திலிருந்த தமிழ் மாதர் தாய் மொழியைப் போற்றி வாழ்ந்து தலை சிறந்து விளங்கினர். தமிழ் மொழியைப் போற்றுவார் குன்றவே தாய் மொழிக் கல்வி குன்றிற்று. தாய் மொழிக் கல்வி குன்றவே பெண்கள் கல்வியும் குன்றிற்று. தமிழ்ப் பெண்கள் தாய் மொழியை மறக்கவே தாய் நாட்டையும் தம்மையும் மறந்தனர். தம் கடமையை மறந்தனர், உரிமையை இழந்தனர், அடிமைத் தன்மையை யடைந்தனர்.

பெண்களுக்குச் சுய உணர்வென்பது அவர்கள் உள்ளத்திலேயே ஒடுங்கி இருப்பது. தாய் மொழிக் கல்வி நிரம்பப் பெறவே, அது அவர்களிடை அரும்பும். பெண்களின் உரிமையென்பது ஒருவரால் தூக்கிக் கொடுக்கப்படுவதல்ல; போராடிப் பெறவேண்டியதுமல்ல; அவர்கள் கல்வி அறிவு பெற்றுத் தத்தம் கடமைகளைச் செவ்வனே ஆற்றுவார்களானால் அவர்களை அடைவதற்கு வழி வினவிக்கொண்டு வரும். பெண்களின் அடிமைத்தனம் என்பது அவர்கள் உள்ளத்தின் அமைப்பைப் பொறுத்தது. குறைந்த அறிவே அடிமைத்தனம் அடையச் செய்வது; அவர்கள் உயர்ந்த அறிவு பெற்றுப் பரந்த நோக்க முடையவராய்த் திகழும் காலமே தம்மையும் தம் நிலையையும் அவர்கள் அறிந்தவராவார்கள்.

ஆங்கிலப் பயிற்சி

தாய் மொழியைக் கற்கவேண்டுமென்றால், பிற மொழிகளைக் கற்க வேணடாமென்பதல்ல. முதன்மையாகத் தாய் மொழியைக் கற்கவேண்டுமென்பதாகும். கற்க விரும்புவோர் வேறு எத்தனை மொழிகளையும் கற்கலாம். அவற்றுள் ஆங்கிலம் நமது அரசியல் மொழியா யிருத்தலின் அதனைக் கற்க வசதியுடையோர் கற்றுக்கொள்ளலாம். மேலும் அதனை அறிந்திருந்தால் தற்கால அரசியல் நடவடிக்கைகளையும் உலக நடவடிக்கைகளையும் நன்கு யறியலாம். பிற மொழிகளிலிருக்கும் நூல்கள் பல ஆங்கிலத்தில்

மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் அரிய நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்கலாம். தற்காலம் அரசியல் முறைகள் யாவும் ஆங்கிலத்தில் நடைபெறுவதனால், அதனை எழுதப் பேச வாசிக்க அறிந்திருப்பது நல்லதுதான். ஆனால், தற்காலம் தாய்மொழிக் கல்வியைச் சிலர் நாகரீகக் குறைவெனக் கருதிக் கற்க விரும்பாமலிருப்பதுதான் தாழ்வு.

நமது தாய்மொழியை சில பிள்ளைகள் கற்க விரும்பினாலும் பெற்றோர் கவனிப்பதில்லை. சில பெற்றோருக்குத் தம் பிள்ளைகள் தமிழில் என்ன படிக்கிறார்கள் என்பதும் தெரியாது. பொதுவாகப் பிள்ளைகளின் படிப்பைத் தாயார் அறிந்திருக்கவேண்டும். சில பெண் பிள்ளைகள் பள்ளிக்கூடப் படிப்பு நிறுத்தியதும், வீட்டிலிருந்து தையல், பின்னல் முதலியவற்றை ஊக்கமாகப் பழகுகிறார்களே யன்றித் தமிழைக் கவனிக்கிறார்களில்லை. பெண்கள் தையல் முதலியவற்றை அறிந்திருத்தல் நன்றே. அதனோடு, முதன்மையாகத் தமிழ் மொழியைக் கற்றலே நன்றாகும்.

பெண்கள் கடமை

தற்காலத் தமிழ்ப் பெண்களின் நிலையைக்கண்டு தமிழ்த் தாய் நாணமடைகிறாள்; வருந்துகிறாள்; ஓலமிடுகிறாள். நோயுற்ற காலத்தில் தாய்மார் பெண் மக்களை விரும்புவது போல அவளைக் கவனிக்கவேண்டியது பெண்மக்கள் கடமை. பிறநாடுகளிற் பெண்கள் எவ்வாறு தத்தம் தாய் மொழிகளைப் போற்றி வாழ்கின்றனர் என்பதை நோக்குங்கள். அவர்கள் பிற மொழிகளை நன்றாய் கற்றிருந்தாலும், தம் தாய்மொழியில் மிகுந்த பற்றுடையவர்களாயிருக்கின்றனர்.

பெண்காள்! நீங்கள் நித்திய கருமங்களை நாடோறும் தவறாது செய்வது போலவே தாய் மொழித் தொண்டையும், ஒரு நாளும் தவறாது செய்தல் வேண்டும். சோம்பலுறாது வருந்திப் பல நூல்களைக் கற்றுத் தமக்கும் பிறர்க்கும் பயன்படும்படி வாழுங்கள். அல்லும் பகலும் தமிழ்த் தாயை நினையுங்கள்.

உங்கள் குழந்தைகட்குத் தாய் மொழிக் கல்வியை ஊட்டுங்கள். ஆண் குழந்தைகள் உத்தியோகக் கல்வியின் பொருட்டுத்

தாய் மொழியைக் கவனியாது விட்டுவிடுவார்கள். ஆகையால், முக்கியமாக அவர்களைத் தாய்மொழிப் பற்றுடையவர்களாகச் செய்யவேண்டியது தாய்மாரின் கடமை. தமிழ் மொழியைத் தற்கால நிலைக்கேற்றவாறு வளமுறச் செய்யவேண்டியது அறிஞர்கள் கடமை. அதனைப் போற்றி வாழுதல் பெண்கள் கடமை விருப்பம் வைத்து நீங்கள் உங்களுக்குரிய தாய் மொழியைக் கற்க விரும்புவீர்களானால், தமிழ்த் தாயின் நாணமும் ஒலமும் அடங்குமென்பதை நீங்கள் மனதில் மறவாமல் வைத்து அவளை வளர்த்து வருவீர்களாக.

பெண்கள் சுதந்திரம்.

நொண்டிச்சிந்து

(கே. வி. அப்பா)

பெற்றிமைசேர் பூவுலகில்—இந்திய
பெண்களை நம்மவர் நடத்தும் விதம்

அந்தோ அது கொடுமை—அவர்
ஆண்களுக் கடிமை ஆயுள் வரை

என்றுமே தாம் பேசி—அவர்
இன்ப சுதந்திரமதை வஞ்சனையுடன்

மறுப்பது மாண்புடைத்தோ?—ஐயோ
மனத்தருமத்திற் கிது மாற்றமல்லவோ?

சின்னஞ் சிறுவயதில்—கணவன்
சென்றிடில் விதவை யெனப் பட்டமுங்கட்டி

எழில்குழல் தான் சிதைத்து—அவள்
இலங்கிடும் ஆபரணம் இறக்கிடுவார்

கலர்ப் புடவை களைந்து—அன்னவர்
கண்கலங்க வெண்புடவைதான் கொடுத்து

பண்ணு மலங்கோலம்—இதைப்
பார்த்திடுவீர் நீங்கள் பகுத்தறிவால்

ஞாயமோ விதிவர—நம்
நாட்டிலே அபசகுனம் ஆச்சுதே என்பார்

இறந்திடலாகாதோ என்பார்—நீ
எந்த உலகை யாளவிருப்பதோ வென்பார்

தேர்த்திருநாள் எதுவுமுண்டோ—வீட்டில்
சிறையன்றி உறைவிடம் வேறேது முண்டோ

இயற்கை யுணர்ச்சியடக்க—முடியா
எண்ணற்ற விதவையர் மறைந்துமே கூடி

வயிற்றினில் சூலதுகொண்டு—அதை அழிக்க
வன்கண்மையாய்ச் செயல்புரிந்து தான் மடிகிருர்

மாதர்கள் மறுமணத்தால்—இக் குழந்தை
வாழ்ந்திடு மாதலால் இதையுணர்வீர்

ஆண்மகன் துணையிழந்தால்—உலகில்
அடுத்தடுத்தவர் மண முடிப்பார்

ஈங்கவர்க் குரிமையில்லையோ—இதுபோல்
ஏந்திழை வர்க்கமதற்கு மின்ப மில்லையோ

இயற்கையால் எழும் உணர்ச்சி—அதனுல்
இவ்வுலகில் முனிபுங்கவரும் பிறழ்ந்தார்

உடலமைப்பின் மாற்றம்—எனினும்
உணர்ச்சி ஒன்றேயன்றிப் பிறிதாமோ?

இன்ப மறுமணத்தால்—வானும்
இடிந்திடுமோ உயிர் மடிந்திடுமோ?

விதவையர் கோலத்தைக் கண்டு—இன்பம்
வேம்பாக மாறுவதும் உண்டு கொலோ?

இரவு பகலதாமோ—அவர்கட்கு
யேசிடு மொழிகள் யாவும் கரும்பாமோ?

பெண்களுக் கொருநீதி—இங்கு
பேசிடும் ஆண்களுக்கொரு நீதியா?

நங்கையர்க் கடிமையின்நிலை—யளவும்
நாட்டினுக் கொருகாலும் விடுதலையில்லை

அவர்களின் அருங்குணத்தால்—இதுவரை
ஆடவர்செய் பெரும்பிழை பொறுத்தார்

ஆதலால் சோதரர்காள்—நீங்கள்
அன்பறம் ஆற்றுவதற்கே எழுமின்

இவர் விதவையர் எனும்சொல்—வீழ்த்தி
இயற்கை யழகுத் தெய்வமென் றழைமின்

கன்னியர் துணையளக்கில்—இன்பக்
காதல்மணமே செய்து துயர் துடைமின்

மாதர் மறுமண மெனும்பேர்—கொண்ட
மா பெரும் பத்திரிகை வரவழைமின்

பெண்கள் அடிமை விலக்க—நீவிர்
பேச்சளவில் நின்றிடாது சட்டம் செய்யுமின்

வெற்றி முரசடித் தொலிமின்—வீண்
பெருமைதனைக் களைந்து வெளிப்படுமின். (பெ)

கருணை உள்ள இடத்தில் - - - விதவை இல்லை.

சிவகுருநாதன்,
செந்தமிழ் நிலயம்.
கும்பகோணம்.

இந்திய மாதர் முற்போக்கு

(லக்ஷ்மி)

உலக சிருஷ்டியில், மிகவும் பரிபூரணத்வம் அடைந்திருப்பது மனிதன்தான். ஆகவே, மனிதன் தோன்றுவதற்குக் காரணமாயிருக்கும் பெண்ணினமும் பரிபூரணத்வம் அடைந்திருக்க வேண்டுமென்பதில் ஆச்சரியப்படுதற்கொன்றுமில்லை. அன்பு, தயை, பொறுமை, திடசித்தம்—ஆகிய குணங்களில் பெண் ஆணைவிடச் சிறந்து விளங்குகின்றாள். உலகில் தாயின் அன்பைவிட உயர்ந்தது வேறில்லை; 'தாய்' என்ற வாக்கைவிட இனிய வாக்கு வேறில்லை. ஆடவனைவிட அவளிடம் அதிகத் தெய்வத் தன்மை இருக்கிறது.

ஆடவனுடைய இச்சைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்யவே பெண் படைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லும் வாதம் அதிக முட்டாள் தனமானது. மனித சமூகத்தில் ஆண் ஒரு பகுதி; அதைப்போன்று பெண் மறுபகுதி. பெண் வீட்டுத் தலைவியாக மட்டுமின்றி, நல்லாசிரியையாகவும், மனிதனுக்குத் தோழியாகவும் விளங்குகின்றாள். குழந்தையின் சுபாவத்தை உருப்படுத்துபவள் தாய்தான். பெரிய மனிதர்களிற் பலர், தங்களுடைய அரிய செயல்களுக்கெல்லாம், தங்கள் இளமைப் பருவத்தில் தங்கள் தாய்மார்களிடத்தில் பெற்ற பயிற்சியே காரணம். விஞ்ஞானம், இலக்கியம், அரசியல், நீதி நெறி ஆகிய துறைகளில் பெண்கள் ஆற்றியுள்ள தொண்டு குறைவாக மதிப்பிடற்குரியதன்று. ருஷ்யா, இத்தாலி, பிரான்ஸ் முதலிய தேசங்கள் பெண்களை போர்த் துறையில் பழக்குவதன் நற்பலனை உணர்ந்திருப்பது, ஆண்களுக்கே யென ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள துறைகளில் பெண்களும் உழைக்கத் தகுதியுடையவர்கள் தாமென்பதை நிரூபிக்கின்றது.

நமது தேச சரித்திரத்தைக் கவனித்தால், வீர திலகங்கள் வம்ச பரம்பரையாக விளங்கியிருப்பதைக் காணலாம். சாந்த்பீபி, பத்மினி, ஜான்ஸி ராணி, லக்ஷ்மி பாய் முதலிய பெண்மணிகள்

தங்கள் வீரச் செயல்களால் இந்திய சரித்திரத்தைப் பிரகாசிக்கச் செய்துள்ளார்கள்.

முன்னாட்களில், இந்தியப் பெண்கள் சமூக முன்னேற்ற விஷயத்திலும், உலகக்கண் முன்னே நம்நாடு உயர்நிலை அடைந்து நிற்கும் விஷயங்களிலும், முதற்படியிலேயே நின்றனர். கலை, கல்வி கைத்தொழில், அரசியல் ஆகிய துறைகளில் அவர்கள் இயற்றி யுள்ள அரும் பணி உலகறிந்ததொன்று. அவர்கள் கொண்ட தாய் நாட்டன்பு புகழ்தற்குரியது. இன்று நாம் சுயராஜ்யத்துக்கு வெகு சமீபத்திலிருந்தால், அது பெண்களுடைய தன்னலமற்ற விடா முயற்சியாலேற்பட்டது என்று சொல்வது மிகையாகாது.

இந்தியாவில் பெண்கள் மிகக் கீழான நிலையிலிருப்பதாகச் சிலர் சொல்லுகிறார்கள். இந்திய பெண்களுடைய முற்போக்கை பற்றிச் சிறிது கவனிப்போம்.

கல்வி:—பெண்கள் ஏராளமாகக் கற்றுவருகிறார்கள். படிக்கும் பெண்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கலை, விஞ்ஞானம், வைத்தியம் ஆகிய துறைகளில் படித்துப் பட்டம் பெற்று கலாசாலைகளிலிருந்து வெளியேறும் பெண்களின் தொகையிலிருந்து இந்தியப் பெண்களிடையே தோன்றியுள்ள எழுச்சியை அறிந்துகொள்ளலாம். தேசத்தில் பெண்களுக்கென கலாசாலைகளும் கல்லூரிகளும் பல இருக்கின்றன. பல ஆயிரக் கணக்கான பெண்கள் இவற்றில் படிக்கிறார்கள். இந்த ஸ்தாபனங் களில் பெரும்பாலானவை இந்தியப் பெண்களாலேயே நடத்தப் படுகின்றன. அநேகமாக எல்லாக் கல்லூரிகளிலும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் கல்வி புகட்டப்படுகின்றது. ஆயிரக்கணக்கான பெண்கள் இக் கல்லூரிகளில் படிக்கின்றார்கள். கல்வி பெறுந் திற மையிலும், புத்தி சாதுர்யத்திலும் இவர்கள் ஆண்களோடு போட்டி போடுகின்றார்கள். சர்வகலாசாலைப் பரீட்சைகளில் பெண்கள் முதற்படியில் நிற்பது சர்வ சாதாரணமாகிவிட்டது. பண்டித கார் வேயின் மாதர் கலாசாலை, இந்நாட்டில் பெண் கல்வி யபிவிருத்திக் கேற்பட்ட ஸ்தாபனங்களின் கூட்டத்தில் முதன்மையானதாகு மென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பெண்களுக்குக் கல்வி புகட் டக்கூடிய ஸ்தாபனங்களும், ஆசிரமங்களும் வேறுபல இருக் கின்றன.

அரசியல்:—தேசத்தின் அரசியல் கிளர்ச்சிகளிலும் பெண்கள் முக்கிய பங்கெடுத்து வருகிறார்கள். எல்லோரும் தேசீய மனப் பான்மையுடன் விளங்குகிறார்கள். 1930-லும் 32-லும் நடந்த சட்ட மறுப்பு இயக்கங்களில் சட்டத்தை எதிர்த்து, தாய் நாட்டுக்காகச் சிறைசென்ற பெண்கள் பலர். ஸ்ரீமதி சரோஜினி நாயுடு—இந்தியக் கவி திலகம் இக்கூட்டத்திற்கு ஒரு உதாரணம். இன்னும் ஸ்ரீமதி ஹன்ஸா மேத்தா, ஸ்ரீமதி சுப்பராயன், ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட், ஸ்ரீமதி லீலாவதி முன்ஷி, ஸ்ரீமதி கமலா தேவி ஆகிய பல புகழ்பெற்ற பெண்மணிகளைக் குறிப் பிடலாம். நிர்வாகத் திறமையிலும் பெண்கள் சிறந்து விளங்கு வார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாக, ஐக்கிய மாகாணத்தில் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் மந்திரியாகவும், பம்பாய் கவர்ன் மெண்டில் ஸ்ரீமதி ஹன்ஸா மேத்தா பார்லிமெண்டரிக் காரிய தரிசியாகவும், பம்பாய் சட்டசபையில் ஸ்ரீமதி லீலாவதி முன்ஷி ஒரு அங்கத்தவராகவும், டில்லி மத்திய சட்டசபையில் ஸ்ரீமதி சுப்பராயன் ஒரு அங்கத்தவராகவும் விளங்குகின்றனர். லேடி வித்யா கௌரி, ஸ்ரீமதி ஜயஸ்ரீ ராய்ஜீ, டாக்டர் மலினி சுக்தால் கர், ஸ்ரீமதி சபாவாலா முதலிய பல மாது சிரோன்மணிகள், இந்திய மாதர் நலங்கருதி உழைத்து வருவதை இங்கு குறிப் பிடலாம்.

கலை:—அருங் கலைகளை யெடுத்துக்கொண்டால், சங்கீதம் நடனம், நடிப்பு ஆகியவற்றில் பல இந்தியப் பெண்கள் சிறந்து விளங்குவதைக் காணலாம். ஹீராபாய் பரோ தேக்கர், ஷோலாப் பூர் மேத்தாப்ஜான், லக்ஷ்மிபாய், ஜோதி பாய் ஆகிய திலகங்கள் இந்திய சங்கீதம் இருக்குமட்டும் மங்காப் புகழ்பெற்று விளங்கு வர். சமீப காலத்தில் சினிமா நடிப்பிலும் பெண்கள் அதிக வெற்றி பெற்றுவிட்டார்கள். தேவிகாராணி, சாந்தா ஆப்தே, கன்னன் தேவி, துர்க்கா கோட்டே, லீலா தேசாய், உமா ஷஷி முதலிய நாமங்களை ஒவ்வொருவரும் உச்சரிக்கின்றனர். அச்சுத் கன்யா, பாபி, வித்யாபதி, சண்டிதாஸ், தேவதாஸ், துக்காராம் முதலிய உயர்தரப் படங்கள் இந்தியப் பெண்களின் உயர் குணங் களை உலகுக்கு எடுத்துக்காட்டுகின்றன.

விவ்சாயம்:- தேசத்தின் விவசாயத் துறையிலும் பெண்கள் எடுத்துவரும் பங்கு சிறிதல்ல. இந்தியா ஒரு விவசாய நாடு. தேச மக்களில் 80 சதமானம் பேர் விவசாயத்தாலேயே தங்கள் ஜீவிதத்தை நடத்துகிறார்கள். கழனிகளில் நடைபெறும் வேலையில் நேர் பகுதிக்குமேல் பெண்களாலேயே செய்யப்படுகின்றது. இன்றளவும் குடிசைத் தொழில்கள் பல இறவாது இருந்து வருவதற்குக் காரணம் நமது பெண்கள்தான். கையால் நூற்றல் ஆயிரக்கணக்கான வீடுகளில் நடைபெற்று வந்திருக்கும் தொழில். சில சமயம் ராட்டை நூல் மிக மெல்லியதாயும் விலை உயர்ந்ததாயுமிருக்கும். நடுத்தர, எளிய வகுப்புக் குடும்பங்கள் பல நூற்றல் தொழிலாலேயே காலங் கழிக்கின்றன. தையல், பிரம்பு முடைதல், முதலிய இதரக் குடிசைத் தொழில்கள் குடும்பங்கட்கு வருமானத்தைத் தருகின்றன. பம்பாய், கல்கத்தா, மதராஸ் முதலிய இடங்களிலுள்ள பள்ளிக்கூடங்கள் பலவற்றில் பெண்களுக்கு இத் தொழில்கள் கற்பிக்கப்படுகின்றன.

இளமை மணம்:—சாரதா சட்டம் வருமுன் இந்நாட்டில் குழந்தை மணங்களும், குழந்தை விதவைகளும் சர்வ சாதாரணமாக இருந்துவந்தன. இந்தக் கொடிய வழக்கத்தை சாரதாச் சட்டம் நன்கு கட்டுப்படுத்திவிட்டது. இச்சட்டம் பதினான்கு வயதுக்குக் குறைந்த பெண்களுக்கு மண முடிக்கக்கூடாது என்று தடுக்கின்றது. மண வயதைப் பதினெட்டாக உயர்த்தினால் நாட்டுக்கு அதிக நலனுண்டு என்று கருதுகிறோம்.

—'Women of India to-day'.

விதவை கண்ணீர்

வீட்டை அழிக்கும்

மாமியும்—மருமகளும்

(ப. நீலகண்டன்)

திருநெல்வேலியில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். ஹோட்டலில் சாப்பாடு. தனி வாழ்க்கை. இந்தச் சமயம் வந்து சேர்ந்தார்கள், எனது அத்தையும் மற்றுமொரு உறவினரும். அத்தை மகள் பெரியவளாகிவிட்டாளாம். கலியாணத்தைப் பற்றிப் பேச்செடுத்தார்கள். கலியாணம் செய்துகொள்ள ரொம்ப சந்தோஷப்பட்டேன். பெண்ணை நேரில் பார்க்கவேண்டுமென்று சொன்னேன். அவர்களும் சம்மதித்தார்கள். திருநெல்வேலிக் கருகாமையில்தான் அவர்களுடைய ஊரும் இருந்தது. சென்றேன்; பெண்ணைப்பார்த்தேன்; திருப்தியாயிருந்தது.

வயதான என் தாயாருக்குக் கடிதம் எழுதினேன். அவர்கள் இன்னும் கொஞ்சகாலமாகட்டும் என்று பதில் எழுதினார்கள். நான் கேட்கவில்லை. கலியாணத்தை நடத்தித்தாருகவேண்டுமென்று மறுபடியும் கடிதமெழுதினேன். தமயனும், தாயாரும் யோசித்து திருமணத்தை நடத்துவதென்று தீர்மானித்தார்கள். புண்ய ஸ்தலமாகிய சிதம்பரத்தில் திருமணம் நடந்தது. நான்கைந்து தினங்கட்குப் பின் நானும், என் மனைவியும் திருநெல்வேலி சென்று புதுக் குடித்தனம் நடத்த ஆரம்பித்தோம்.

சுமார் ஏழு மாதங்கள் சென்றன. தாயார் திருநெல்வேலி வந்து சேர்ந்தார்கள். இரண்டொரு நாட்களுக்குள் தாயாரும் மனைவியும் முரண்டிக் கொண்டார்கள். சண்டை வந்துவிட்டது. எனக்கு— இவர்கள் சண்டையை விசாரிக்கவும், சமாதானம் சொல்லவுமே நேரம் சரியாக இருந்தது. மனைவி செய்தது அவ்வளவு பெரிய குற்றமில்லையே என்று ஏதாவது சமாதானம் சொல்ல வந்தால் தாயாருக்குக் கோபம் வந்துவிடும். மனைவியின் சார்பாகப் பேசுவதாகக் குறை கூறினார்கள். இவ்வாறாக ஏழெட்டு மாதங்கள் ஓடி மறைந்தன. தாயார் இங்கிருக்க இஷ்டப்படாமல் தமயனிடம் போகவேண்டுமென்றார்கள். உண்மையிலேயே என் மனைவி உபத்திரவப்படுத்தினாள் என்றே சொல்லவேண்டும். கலியாணமான புதி

தில் நானும் என் மனைவியும் மாத்திரம் தனியாக வாழ்க்கை நடத்தினுமேல்லவா? அப்படிப்பட்ட கேட்பாரற்ற தனி வாழ்க்கைக்கு என் தாயார் பங்கம் விளைவிப்பதாக எண்ணினுள், மனைவி.

அப்பொழுதுதான் உணர்ந்தேன். ஆரம்பத்திலேயே மூவரும் இருந்து குடித்தனம் நடத்தியிருந்தால் தனி வாழ்க்கைக்கும் கூட்டு வாழ்க்கைக்கு முள்ள வித்தியாசமே தெரியாமற் போயிருக்குமே என்று. எவ்வளவோ சமாதானம் சொல்லிப் பார்த்தேன். தாயார் எங்கள் சொந்த ஊருக்கே போய்விட்டார்கள்.

நான்கு மாதங்கள் சென்றன. நான் சொந்த ஊருக்குச் சென்றேன். தாயாரைக் கூட்டி வந்தேன். பத்துப் பதினைந்து தினங்களுக் கப்புறம் மீண்டும் 'யுத்தம்' ஆரம்பித்துவிட்டார்கள். சகிக்கமுடியவில்லை. மனைவியை எவ்வளவோ கண்டித்துப் பார்த்தேன். சுருக்கமாகச் சொல்கிறேன்: தாயாரைத் திருப்திப் படுத்த முடியவில்லை. அவர்களின் அன்பை இழந்தேன். மனைவியையும் திருப்திப்படுத்த முடியாமல் அவளின் அன்பையும் இழந்தேன். எனது வாழ்க்கையில் சந்தோஷம் மறைய ஆரம்பித்தது. ஒவ்வொரு நிமிஷமும் ஏற்படும் இவர்களது சண்டையை சமாதானம் செய்வதிலேயே என் பொழுதெல்லாம் கழிந்தது.

இவ் விஷயங்களை எல்லாம் அறிந்த நண்ப ரொருவர், என்னைத் தேற்றுவதன் பொருட்டு "வீட்டுக்கு வீடு வாயிற்படிதான் சார், கவலைப்படாதேயுங்கள்" என்ருர்.

மாமியும் மருகியும் சேர்ந்து வசிக்கும் இல்லத்தில் சிறிதாவது புகைச்சல் இல்லாமல் இருப்ப தில்லையென்று என்னுடைய அனுபவத்தினின்றும் கூறுகிறேன். அனுபவசாலி என்கிற முறையில் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகின்றேன்.

இடையிலிருக்கும் ஒருவனது சந்தோஷத்தைக் குலைக்காமலிருப்பதற்காகவாவது மாமியும் மருமகளும் சிறிது நேசத்தோடு நடந்துகொள்ள வேண்டியது மிக மிக முக்கியமாகிறது.

மாமியாக இருக்கும் தாய்மார்களே! நீங்கள் மருமகளை உங்கள் மகளாகவே எண்ணுங்கள். உங்கள் வீட்டிற்கு வந்துவிட்ட அந்தப் பெண்ணை அன்போடு நடத்துங்கள். உங்கள் ஏவல்களைச்

செய்வதற்காகவே விலைக்கு வாங்கப்பட்ட அடிமை என்று எண்ண வேண்டாம். உங்கள் மாமியார் உங்களைக் கொடுமைப்படுத்தியதற்காக—பழிவாங்கும் நோக்கத்தோடு உங்கள் மருமகளை இம்சைக்குள்ளாக்குவது எள்ளளவும் நியாயமாகாது. ஒரு சமயம் நான் நேரில் கண்டேன். மாமியால் கொடுமைப் படுத்தப்பட்ட இளம் பெண்ணொருவள் "நாமும் மாமியாராக வந்து நமது மருமகளை அதிகாரம் செய்யும் காலம் எப்பொழுது வருமோ" என்று ஏங்கினள். யாரோ ஒருவர் நம்மைக் கொடுமைப் படுத்தியதற்காக சம்பந்தமில்லாத ஒருவரை அதிகாரம் செய்வது கொஞ்சமாவது நியாயமாகுமா? உங்கள் மகனின் இன்பத்திற்கு—வாழ்க்கையின் வழிகாட்டியாகத் தோன்றிய மருமகளை மகளின் சம நிலையிலே வைத்துப்பாருங்கள். அற்ப விஷயங்களைப் பெரிதாக்காதீர்கள்.

மருமகளாக—இருக்கும்—ஆகப்போகும் சகோதரிகளே!

திருமணத்திற்கு ஏற்பாடு செய்யப்படும் காலத்திலேயே பெண் வீட்டுக்காரர் மாமியாளாக வரப்போகிறவளின் குணத்தைப்பற்றியும் விசாரிப்பது ஒரு அம்சமாக இருக்கிறது. அதற்குக் காரணம், மாமியென்றால், கொடுமைப் படுத்தக் கூடிய ஒரு ஜென்மம் என்ற எண்ணம் எல்லோரிடையும் பரவி யிருப்பது தான். இதுமட்டுமின்றி "மாமி மெச்சிய மருமகளில்லை" என்று கூட ஒரு பழமொழி சொல்லப்படுகிறதல்லவா?

மாமியால் கொடுமைப் படுத்தப்படும் பெண்கள் 60 சதமாவது இருப்பார்கள். மருமகளால் கொடுமைப் படுத்தப்படும் மாமிகள் 20 சதமிருக்கலாம். இருவருமே ஒருவருக் கொருவர் சளைக்காமல் எதிர்க்கும் குணமுள்ளவர்களாக 20 சத விகிதம் இருக்கலாம். இப்படிப்பட்ட மூன்று நிலைமைகளுமே அடியோடு ஒழிய வேண்டும். மாமி மருமகள் சண்டையினால் பலவிதத் தொல்லைகள் ஏற்படுகின்றன. ஒரு மருமகள் தற்கொலை செய்து கொண்டதாகக்கூட கேள்விப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட தொல்லைகளெல்லாம் கொஞ்சம் பரஸ்பர அன்போடு இருந்துவிட்டால், ஏற்பட வழியில்லையல்லவா? தாயாரும், மனைவியும் சச்சரவிட்

டுக் கொள்வதைக் காண இடையிலிருப்பவன் படும் அவஸ்தை கொஞ்சமானதல்ல. பெரும் கவலையில் ஆழ்த்தப்படுகிறான்.

சகோதரிகளே! நீங்கள் உங்கள் மாமிகளைப்பற்றி முதலிலேயே எவ்விதத் தீர்மானமும் செய்து கொள்ளாமல் சுமுகமாகப் பழகுங்கள். உங்களின் இரண்டாவது தாயாக எண்ணுங்கள். மாமியின் செய்கையைப்பற்றிக் கணவனிடம் அடிக்கடி புகார் செய்யாதீர்கள். மாமியாரின் சிறிய அதிகாரங்கட்குக்—கீழ்ப்படிந்து போயாவது கணவனின் சந்தோஷத்திற்குக் கேடு விளைவிக்காமலிருங்கள்.

மாமியும் மருமகளும் என்றால் அந்த இரு ஜீவன்களுக்கிடையே பரஸ்பர அன்பு எப்பொழுதுமே இருக்காது என்ற எண்ணம் எல்லாரிடையேயும் பரவியிருக்கிறது. இந்த எண்ணத்தை அகற்றி, "மாமி மெச்சிய மருமகளில்லை—மருமகள் மெச்சிய மாமியுமில்லை" என்ற பழமொழியையும் தொலைத்துத் தலை முழுக ஏற்பாடு செய்வீர்களாக.

நாடார் சமூகத்தினர்க்கு ஒரு வேண்டுகோள்

(கீரம்பாண்டி மா. அ. பிச்சைமுத்து)

அன்புமிக்க பெரியோர்களே, காலச்சக்கரம் அதிகவேகமாய் சுழல்கிறது. பண்டைக் காலத்தில் கௌரவமெனவும் சம்பிரதாயமெனவும் கடைப்பிடித்துவந்த நீதியற்ற இயற்கைக்கு முரணான சில பழக்க வழக்கங்கள் தற்போது மறைந்துவருகின்றன. சீர்திருத்த சண்டமாருதத்தால் சிதைவுறுகின்றன. எனினும் சில முக்கிய விஷயங்களில், இன்னும் பிடிவாத மனப்பான்மை பிரதிபலிக்கிறது. அவைகளுள் ஒன்று விதவைகள் துயர். இத்துயர் பொதுவாகப் பெண்ணுலகிற்கும் குறிப்பாக சில சமூகத்தவர்கட்கும் ஒரு ஊறு எனில் மிகையாகாது.

தற்போது நமதுநாட்டில் பிரஸ்தாபத் துயர் களைவான்வேண்டிப் பல சங்கங்களும் பத்திரிகைகளும் தோன்றியுள்ளன. மறுமண வுரிமை இல்லா மரபினர் பலரும் விதவைத் துயர் எனும் கொடிய முறையை ஒழிக்க முன் வந்துள்ளது போற்றற்பாலதே. "ஆனால் நம்மவர்கள் (நாடார்) என் செய்கிறார்கள்? மறுமணம் செய்தல் நமக்கு முற்றிலும் வழக்கின்றாம் என சரித்திரச் சான்றை ஆதாரம் காண்பிக்கின்றனர். காலஞ்சென்ற 'க்ஷத்திரிய மித்திரன்' ஆசிரியர் த. விஜயதுரைசாமி கிராமணியார் எழுதிய 'நாடார் என்னுஞ் சொல் ஆராய்ச்சி' என்ற நூலில் நமது குலப்பெண்கள் பால்ய விதவையாயினும், மறுமணம் செய்தல் கூடாதென வாதிப்பதுடன் இதற்கு ஆதாரமாக சான்றோர் மரபு என்ற நூலை (1771-ல் எழுதப்பட்டது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.) உதாரணம் காண்பிக்கிறார். இதைப்பற்றி நாம் இங்கு சர்ச்சை செய்வதும் அறிவுடைமையாகாது. அவர் கொண்டுள்ள கருத்திற் கொருவேளை பொருத்தம் போலும்! ஒரு காலத்தில் ஒரு சிலரால் அனுஷ்டிக்கப்பட்ட நேர்மையற்ற இம்முறையை எக்காலத்திலும் எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டியது தான் என்பதை எந்த நடு நிலையாளரும் ஒப்புவதற்கில்லை. மறுமண வுரிமையை மறுத்து வருவதினால் நாம் அடைந்த பயன் என்ன என்பதைச் சிந்தித்தால், அது அவமானத்தின் சிகரமென்பதை என்னால் மறைக்கவோ மறுக்கவோ முடியவில்லை. நமது பெண்களுக்கு 'மறுமண சுதந்திரம்' கொடாத வரையிலும் நாம் ஆங்கிலேயரிடம் பூரண சுதந்திரம் பெறுவது முயற்கொம்புதான் என்பது வெறும் வார்த்தையல்ல. சீரிய குணசீலர்களே, சிறியேன் வரைதலிற் சீற்றங்கொள்ளாது களங்கமற்ற நடுநிலை மனத்துடன் சிந்தித்துப் பாருங்கள். விபரீத மனப்பான்மையுடன்,

> பழையன பழித்துக் கழித்தும்
> புதியன நத்திப் புகுத்தலுமா?

என தப்பபிப்பிராயம் கொள்ளக்கூடாது. நாம் சுதந்திர வீரர்களாய் வாழவேண்டுமென்றால் நாட்டில் ரகசிய விவகாரங்கள் நலிவுறவேண்டுமென்றால் மறுமணமே மாண்புடைத்து.

விதவா விவாகத்தை ஆதரித்த நமது பிரமுகர்கள் சிலரது அபிப்பிராயங்களையும் இங்கே குறிப்பிடவேண்டியது முக்கியம்: தென்னாட்டுப் பிரமுகர்களில் ஒருவரும் சீர்திருத்த வாதியுமான திருவாளர் W. P. A. சௌந்தரபாண்டியன் அவர்கள், கடந்த ஆண்டில் (ஈசுவர ஆடி 18உ) அருப்புக்கோட்டை வலையர் பூக்குளம் பெண்கள் முன்னேற்றக் கழகத்திற்கு ரூபா 100 நன்கொடையளித்து நிகழ்த்திய சொற்பொழிவில் நாடார் சமூகத்தில் விதவா விவாகம் செய்துகொள்ளும் ஒவ்வொரு தம்பதிகளுக்கும் தமது சொந்தச் செலவில் மணத்தை நடத்தி வைப்பதாய்க் கூறினர்கள். அடுத்தபடியாக அப்படிப்பட்ட மணமக்களுக்கு, ரூ 25 பரிசளிப்பதாய் பிரபல வாலிபர் பெ. சி. சிதம்பர நாடார் அவர்களும் வாக்களித்தனர். இதினின்றும் நமது சமூகப் பெரியார்களிடையே மறுமணம் வேண்டற்பாலதே என்னும் நன்னோக்கமலிந்துள தென்பது குறிப்பிடத்தக்கது. இதைப்பற்றி தற்கால பெரியார்களைக் காட்டிலும் வருங்கால வயோதிகர்களாகிய நாம் மிகுந்த சிரத்தைகொள்ளவேண்டும். பண்புமிகு பால்யர்களே, துணிபு கொள்ளுங்கள். எதிர்கால இந்தியா இந்தப் பழங்கொள்கைகளைப் புறக்கணிக்கின்றது. இடம் பொருள் ஏவல் யாவும் ஒருங்கே அமைந்த மதுரை நாடார் மஹாஜன சங்கமும் மற்றும் நமது ஏனைய ஸ்தாபனங்களும் விதவையர்க்கு விமோசனம் பிறக்கும் வழியில்—மனமுவந்து ஆவன செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

வாழ்க்கைச் சுழல்

(குன்றை மு. பெத்தய்யா)

நான் என் வீட்டில் திண்ணையில் உட்கார்ந்துகொண்டிருந்தேன். எங்கள் வீட்டுக்கு எதிர்த்த மடத்தில் ஒரு சன்யாசி உட்கார்ந்திருந்தார். அப்பொழுது இருபத்தெட்டு வயது மதிக்கக் கூடிய ஒரு வாலிப சன்யாசியும் அம்மடத்திற்போய் உட்கார்ந்தார். முன் இருந்த சன்யாசிக்கு வயது முப்பதிருக்கும். கட்டு மஸ்தான தேக முடையவர். அவர் நாலைந்து மாதமாகவே இந்த

மடத்தில் தான் தங்குகிறார். பகலில் பிச்சை எடுத்துண்பது; இரவு நேரங்களில் அந்த மடத்தில் படுத்துக்கொள்வது. நானும் பார்த்துக்கொண்டுதா னிருக்கிறேன்; அவர் எப்பொழுதுமே ஆழ்ந்த சிந்தனையில்தான் இருப்பார். பல நாட்கள் சென்று ஒரு நாள் எங்கள் வீட்டிற்குப் பிச்சை வாங்க வந்தார். அப்பொழுது அவர் பெயரைமட்டும் கேட்டுத் தெரிந்துகொண்டேன். அவர் பெயர் "வேல்சாமி என்றார்" அதுதான் தெரியும்; வேல்சாமி புதிதாக வந்த சன்யாசியை க்ஷேமம் விசாரிக்கத் தொடங்கினர்.

"சுவாமி தங்களுக்கு எந்த ஊர்" என்றார் வேல்சாமி.

"எனக்கு ஷண்முகநாதபுரம்" என்றார் புதிதாக வந்த சன்யாசி.

"தாங்கள் பெயர்"

"என் பெயர் மூத்துச்சாமி"

"தாங்கள் இக்கோலம் பூண்டதேனே? அதைக் கேட்க ஆவல் கொள்ளுகிறது சொல்லமுடியுமோ"

முத்துச்சாமி சொல்லத் தொடங்கினர்:

நான் கலாசாலையில் படித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுதே என் தகப்பனார் காலஞ் சென்றுவிட்டார். என் தகப்பனார் வைத்துவிட்டுப்போன பணம் கொஞ்சமிருந்தது. அதைக் கொண்டு நான் மெட்ரிகுலேஷன் வரைப் படித்தேன். அப்புறம் படிப்பதற்குப் போதிய பணமில்லாததால் என் படிப்பு சமாப்தியாயிற்று. அப்பொழுது நான் வாசித்துக்கொண்டிருந்த கலாசாலையில் சரஸா என்னும் பெண்மணியும் வாசித்துக்கொண்டிருந்தாள். எனக்கு வயது 18. சரஸாவுக்கு வயது 14. எனக்கு இருந்த பணமெல்லாம் படிப்பிலே செலவழித்தாயிற்று. சரஸாவுக்கு ஏராளமான பணமிருந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் நேசித்தோம். சில நாள் சென்று பள்ளிக்கூடப் படிப்பை நிறுத்திக்கொண்டாள் சரஸா. காலா காலத்திலும் பருவமடைந்துவிட்டாள். பட்டம் பெற்ற இளைஞர் பலர் எனக்கு உனக்கென்று போட்டி போட்டனர். அவர்களை எல்லாம் சரஸா சாக்குப்போக்குச் சொல்லிப் புறக்கணித்தாள். அந்த சமயத்தில் என் தாய்க்கு

உடம்பு சவுகரியமில்லே. உடனே நானே நேரில் போய்க் கேட்டேன். நான் என்றவுடன் சரஸா ஒத்துக்கொண்டாள். ஆனல் பணத்தாசை பிடித்த அவளது தாய் ருக்மணி அம்மாள் "உன்னிடம் என்ன பணமிருக்கிறது? பதினயிர ரூபாய் கொண்டுவந்தால் சரஸாவைக் கல்யாணம் செய்து கொடுப்பேன்" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள். நான் பதினயிர ரூபாய்க்கு எங்கு போவது? உத்யோகம் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. என்ன செய்வது? ருக்மணி அம்மாள் முன் சரஸா பேச தைரியமற்றவளாக இருந்தாள். நான் பணம் சம்பாதிப்பதற்கு சிலோனுக்குப் புறப்படத் தயாரானேன். எங்களுக்குச் சொந்தமாகக் கொஞ்சம் நிலமிருந்தது. அதை விற்றுக் கொஞ்சம் பணம் சேர்த்துக்கொண்டு புறப்பட்டேன். போய் நாலேந்து வருஷங்கள் சென்றிருக்கும். என் சிநேகிதன் ஒருவன் சிலோனுக்கு வந்திருந்தான். அவனிடம் தகவலேயும் கேட்டேன். நான் வந்த ஒரு வருஷத்தில் யாரோ ஒரு கிழவர் வந்து நான் இறந்துவிட்டதாகச் சொல்லி சரஸாவைக் கல்யாணம் செய்துகொண்டாராம். அதற்கு பல காரணங்கள் உண்டாம். அதாவது அவர் பேரால் பேங்கில் ஒன்றரை லட்ச ரூபாய் இருந்ததாம். அவருக்கு சந்ததி ஒன்று மில்லாததால் தனக்கே அந்தப் பணம் சேருமென் றெண்ணியே ருக்மணியம்மாள் இக் கல்யாணத்திற் கிசைந்தாளாம். கல்யாணம் நடந்த மறு வருஷத்தில் அக்கிழவர் காலஞ் சென்றுவிட்டாராம். அவர் போட்டிருந்த பேங்கும் கவிழ்ந்துவிட்டதாம். ஆகவே தற்சமயம் விதவை என்ற பட்டத்தோடு இருக்கிருள் என்றுன். அப்பொழுது நான் சேர்த்து வைத்திருந்த இரண்டாயிர ரூபாயை எடுத்துக்கொண்டு அவளது பாழ்பட்ட வாழ்வைப் புனிதப்படுத்த விரைந்து வந்தேன். அதற்குள் யாரோ நான் செய்யவேண்டிய கடமையைச் செய்துவிட்டதாகக் கேள்விப்பட்டேன். அவர்கள் இருக்குமிடத்தை விசாரித்தேன். அவர்கள் வேறெங்கோ குடியேறிவிட்டார்களாம். அப்புறம் எனக்கு அங்கென்ன வேலே? நாலேந்து வருஷமாக இப்படி ஏகாந்தமாகக் கிளம்பிவிட்டேன். இது என் வாழ்க்கையில் "ஓர் சுழல்" என்று கூறிமுடித்தார் முத்துச்சாமி.

"அவளது பாழ்பட்ட வாழ்வைப் புனிதப்படுத்தியது இந்த சடலந்தான். ஆனால் மூன்று வருடங்கள்தான் இருவரும் இன்புற்றிருந்தோம். அதற்கு மேல் என்னைவிட்டு அவள் பிரிந்துவிட்டாள். விண்ணுலகில் எனக்காகக் காத்துக்கொண்டிருப்பாள்" என்றார் வேல்சாமி. அவரது முகம் குப்பென்று வியர்த்திருந்தது.

அபலையின் அவதி!

(P. தனுஷ்கோடி)

மாலை ஐந்து மணியிருக்கும். சிவன் ராத்திரிக்கு இன்னும் இரண்டு தினங்கள் தான் இருந்தன. காற்று பலமாக வீசிக் கொண்டிருந்தது. கீழே கொட்டியிருந்த புஷ்பங்கள் காற்றில் பறக்கவே, அவற்றை எடுத்துக் கூடையில் போட்டேன். பண்டிகை சமயமாதலால் பலர் என் கடைக்கு வந்து புஷ்பம் வாங்கிச் சென்றனர்.

அப்பொழுது மின்னொளியோ, பூங்கொடியோ என்று ஐயுறும் வண்ணம் என் முன் ஓர் யுவதி தோன்றினாள். மிக இளமை. முகத்தில் காணும் இளமையின் வசீகரம்—சாந்த ஸ்வரூபம் அவளுக்கு நாம் கருணை காட்டவேண்டுமெனத் தோன்றும். கருத்த மேகப்படலங்களைப் போன்று அடுக்கடுக்காக வளைந்து நெளிந்து வளர்ந்திருந்த கேசக் கூட்டத்தின் நடுவே, சந்திரனைப் பழிக்கும் ஆனந்தகரமான முகம் தெள்ளெனத் தோற்றிற்று. அந்தோ! அவ்வழகியின் காதுகளும் மூக்குகளும் காலியாகவே இருந்தன. அவளது அன்ன நடைக்கேற்ற—குலுங்கலில் ஏற்படும் பாதசர ஒலி கேட்கும் மிருதுவான பாதங்களிலும் ஒன்றும் காணோம். பைங்கிளியின் கழுத்தைப் போன்ற மெல்லிய கரங்களும் காலியாகவே இருந்தன.

காரணம் என்ன? அவள் ஏழைப் பெண்ணா? இல்லை! இல்லை! செல்வச் சீமான், மாணிக்கம் செட்டியாரின் திருக்குமாரி லக்ஷ்மி தான் அவள். அவள் ஏன் பின் அவ்வாறு காணப்படவேண்டும்?

இதை நினைக்கும் பொழுது துக்கம் தொண்டையை அடைத்தது. கண்களில் என்னை யறியாது கண்ணீர் வழிந்தோடியது. அவள் கொடுத்த காசுக்கு புஷ்பத்தைக் கொடுத்துவிட்டேன். ஆனால் அவள் அதை வாங்கிக்கொள்ளும் பொழுது—நான் கண்ணீர் விடுவதைப் பார்த்துவிட்டு, அவளும் இரண்டுதுளிக் கண்ணீர் விட்டாள். அடுத்த நிமிஷம் பார்க்கும்பொழுது மறைந்துவிட்டாள்.

2

ஐந்து வருஷங்கட்கு முன்னால் நானும், அவளும் ஒன்ருக ஒரே வகுப்பில் படித்தோம். காலனின் கோலத்தால் என் தந்தை மரிக்க நான் அனுதையாகப் பள்ளியைவிட நேர்ந்தது. அதே சமயம் விதியின் விபரீதத்தால் அவள் தகப்பனருக்குப் படிப்பு வேண்டாம் என்று தோன்றியது. அவளும் பள்ளியைவிட்டாள். அப்பொழுது தான் நாங்கள் இருவரும் ஆருவது வகுப்பிற்கு மாற்றப்பட்டோம். அவளின் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள்.

நான், சிறிதாக என் தந்தை வைத்திருந்த புஷ்பக் கடையையே நடத்திவந்தேன். எனக்கு என் கிழட்டுத் தாய்தான் வியாபாரத்திற்கு உதவி செய்தும், யோசனை கூறியும் வந்தாள்.

இதற்கிடையே அவளுக்கும், எனக்கும் இன்பகரமான கடிதப்போக்கு வரத்துகள் நடைபெற்று வந்தன. புஷ்பம் வாங்க வருபவள்போல் அடிக்கடி என் கடைக்கு வருவாள். என்னுடன் இனிமையாகச் சம்பாஷிப்பாள். கொஞ்சும் மழலை மொழிகளால் என்னை பரவசப்படுத்துவாள். அச்சமயங்களில் பிறர் அறியாமல் நாங்கள் கடிதங்களைப் பரிமாறிக்கொள்வது வழக்கம்.

அவள் மிகவும் சிறிய பெண். அவள் கல்யாணத்தைப்பற்றி லக்ஷ்யம் செய்யவில்லை. நானும் அப்படித்தான் இருந்தேன். அதுவும் லக்ஷ்மிக்குக் கல்யாணம் என்றால், அவள் சிநேகிதனை என்னைத்தான் அழைத்துச் சென்று தாலிகட்டச் சொல்வார்கள்—என்ற அசட்டு புத்தியுடன் இருந்தேன். வாசகர்களே! இதிலிருந்து அப்பொழுது எங்களின் காதல் அறிவு எவ்வளவு

தூரம் இருந்திருக்கும் என்பதை நீங்களே யூகித்துக்கொள்ளுங்கள். ஒருவாறாக அவளுக்குக் கல்யாணமும் முடிந்தது. நான்போகவில்லை. ஊரில் அப்படி பேசிக்கொண்டார்கள். மாப்பிள்ளையின் பெயர் சுந்தரகாந்தமாம்! ஆனால், லக்ஷ்மி அவனுக்கு அக்காள் பிள்ளைதான் ஆகவேண்டுமாம்! தாய் மாமனுக்கே லக்ஷ்மி வாழ்க்கைப்பட்டு விட்டாளாம்! எனக்கென்னமோ இதெல்லாம் கேலியாகவே தோன்றிற்று. என்ன இருந்தாலும் என் சினேகிதி—என் ஆருயிர் தோழி என்னைவிட்டு ஒருக்காலும் பிரியமாட்டாள் என்றுதான் எண்ணினேன்.

3

ஹூம்! அது பழங்கால சரித்திரம்! காலச் சக்கரம் சுழன்று கொண்டிருந்தது. எப்படி எப்படியோ ஐந்து வருஷங்கள் கழிந்து விட்டன. நான் இப்பொழுது சிறு பிள்ளையல்ல! அரசியல், சமூகம் எல்லாம் கற்றுணர்ந்த ஓர் சீர்திருத்தவாதி! புரட்சி மனிதன்!

அவளும் அப்படித்தான் இருப்பாள்! நல்ல செல்வாக்குடனும், பருவகால யௌவனத்துடனும் எழில்மிக வாலிப மங்கையாக இருப்பாள். ஒருக்கால் குழந்தை, குஞ்சு ஏதேனும் இருந்தாலும் இருக்கலாம். ஏதேது அவளைப் பார்த்து ஐந்து வருஷமாகிறது. அவளைப்பற்றி அடியோடு மறந்துவிட்டேன். அவளும் என்னை ஒருமுறைகூடப் பார்க்கவில்லை. இப்பொழுது அவள் வாழ்க்கையில் ஓர் பெரும் புயல் அடித்தது. அதனால் ஒரு பெரிய விருக்ஷம் சாய்ந்தது.

நாய்க்குப் பெயர் முத்துமாலையாம். பிறவிக் குருடனுக்குப் பெயர் செந்தாமரைக் கண்ணனும். அதுபோலிருக்கிறது, லெட்சுமியின் புருஷன் பெயர். முகியோர்களைத் தொன்றுதொட்டுப் பீடித்துவந்த "குஷ்டரோகம்" எனும் கொடிய வியாதி அவனைப் பிடித்திருந்தது. ஆனால் பெயர்தான் வெகு லக்ஷணமாக சுந்தரகாந்தம் என்றிருந்தது.

லக்ஷ்மி புஷ்பவதியடைய ஆறுமாத மிருக்கையில் காந்தனுக்கு வியாதி முற்றியது. அதனால் அவன் கைவிரல்கள் சுருங்கி கோரமாயின. உதடுகள் தடித்துப் பருத்தன. கன்னம் குழி விழுந்தது. கண்கள் பிதுங்கி நின்றன. தலையில் சொட்டை காணப்பட்டது.

லக்ஷ்மியின் பெற்றோர்களுக்கு இது தெரியாததல்ல. ஆயினும் உறவின் முறையைக் கவனித்தனர். பெண்ணின் வாழ்க்கையைவிட சொந்தமே பெரியதென மதித்தனர். அதன் பலனை இப்போது அனுபவிக்கின்றனர். குஷ்டரோகம் பிடித்து கோரஸ்வரூபமடைந்த காந்தன், சரியாக வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு—லட்சுமி புஷ்பவதியான அதே சமயம்—விண்ணுலகப் பிராப்தி அடைந்தான்.

அதைக் கண்ட லக்ஷ்மியின் பெற்றோர்கள் சதறிக் கதறி அழுதனர். "ஐயோ கிளியாட்டமா வளர்த்து பூனை கையில் கொடுப்பதுபோல என் தம்பியின் கழுத்தில் உன்னைக் கட்டிவைத்தேனே! பாபி! எனக்கு என்ன கதி கிடைக்குமோ?" என்று லக்ஷ்மியின் தாயார் பிரலாபித்தாள்.

ஐயோ! உற்றார் என்றும், பந்துமித்திரர் என்றும் சலுகை காட்டிப் பெண்ணைக் குஷ்டரோகிகளுக்கும்,காமவெறியர்களுக்கும் பேய்களுக்கும், நாய்களுக்கும் பலியிடுவோர் எத்தனையோ பேர்! உத்தம இளம் யுவதிகளின் உள்ளத்தை வருந்தச் செய்வோர் எவ்வளவோ பேர்! அபலைகளாக்கி "விதவை" என்ற திருநாமத்துடன் போற்றும் அவசர—ஆத்திரக் குடுக்கைகள் எத்தனை பேர்? ஏ! ஈவிரக்கமற்ற ஹிந்து சமூகப் பெரியார்களே! ஆலோசியுங்கள்! உற்றார், உறவினர் எல்லாம் அப்புறம். முதலில் புருஷனின் யோக்யதாம்சம், குணதிசயம், முதலியவைகளைக் கவனியுங்கள்.

4

அவள் மறைந்ததும் முன்சொன்ன பழய ஞாபகங்கள் என்னைச் சூழ்ந்தன. கபடமற்ற எங்களின் பால்ய அன்பு—சிநேகம் இப்பொழுது இருவர் கண்களிலும் தோன்றிய துக்கக் கண்ணீரில் 'காதலா'கப் பரிணமித்தது. அவள் என்னை விரும்பினாள். இளமையின் சீர்கேட்டை என் உதவிகொண்டு சீர்திருத்த எண்ணினாள். புண்பட்ட உள்ளத்திற்கு ஓர் ஆறுதல் அளித்தேன். பருவகாந்த யுவதி அடிக்கடி புஷ்பம் வாங்குவதுபோல் என்னிடம் வந்து போனாள். கண்கள் உறவாடின. வாய் அச்சத்தைத் துச்சமாக உதறி

சம்பாஷித்தது. மாயப்பிரபஞ்சத்தின் காதல் கனி ரசத்தை எப்படியோ அனுபவித்தோம்.

என்னதான் மூடிவைத்திருந்தாலும் எத்தனை நாளைக்கு? லக்ஷ்மி விரைவிலேயே கர்ப்பம் தரித்தாள். அதைக்கண்ட அவள் வீட்டை விட்டு வெளி வருவதே இல்லை. கட்டிக்கொடுத்த கட்டுச் சாதமும், சொல்லிக் கொடுத்த வார்த்தையும் எத்தனை நாளைக்கு இருக்கும்?

இதற்குள் எனக்கு அடுத்தாற்போல், என் கடைக்குப் போட்டியாக கணேசன் என்பவன் புஷ்பக் கடையைவைத்தான். லக்ஷ்மி என்னிடம் அடிக்கடி வந்துபோவதும், என்னிடம் தமாஷாகப் பேசுவதும் அவனுக்குப் பொறுமையை உண்டாக்கின. தவிர, அவளின் எழில்மிகும் வனப்புமிகுந்த தோற்றம் அவன் மனத்தில் கெட்ட எண்ணத்தை உண்டாக்கியது. அவள் என் கடைப்பக்கம் வரும்போது, 'இந்தாம்மா! நல்ல புஷ்பம் இருக்கிறது. இங்கேவாம்மா!' என்று கூப்பிடுவான்.

வெறும் வாயை மெல்பவனுக்குச் சிறிது அவல் கிடைத்தது போல், இச்சமயம் வேண்டுமென்றே ஓர் புரளியைக் கட்டிவிட்டான். லக்ஷ்மியைக் கெடுத்தது நான்தானும்! அவள் புஷ்பம் வாங்க வரும்போது நான் துராக்ரகம் செய்தேனும்! ஊரில் அப்படிப் புரளி.

இந்தப் பழிச்சொல்லைக் கேட்க எனக்கு மனம் திகிலடைந்தது. நான் குற்றவாளி தானே? அவள் கதியென்ன? சிந்தித்துப் பார்த்தேன். இதினின்றும் தப்பிக்கொள்வதற்குச் சிறந்த வழியொன்றுதான். அது லட்சுமியை மணந்துகொள்வது. ஆனல் ஐயோ! என் கோழைநெஞ்சு அதற்கு இடங் கொடுக்கவில்லை. ஓர் அபலையின் மரணத்துக்குக் காரணமாவேன் என்பதை உணர்ந்திருந்தால், என் மனம் இன்னும் கொஞ்சம் தைரியம் அடைந்திருக்கும். என் தாய்—என்னை அருமையாக வளர்த்து அல்லும் பகலும் உதவி செய்து வந்த தாய், அதற்குச் சம்மதிக்க மாட்டாளே. தள்ளாத வயதில் அவளை அனாதையாய் விடலாமா? அவள் மனம் நோக நடக்கலாமா?—என்றெல்லாம் சிந்தித்தேன். முடிவென்ன? மறுமணஞ் செய்யத் தைரியங்கொள்ளவில்லை.

லக்ஷ்மி மிகவும் சங்கடமான நிலைக்கு ஆளானாள். அவளது தாயே அவளை இகழவும், வையவும் ஆரம்பித்தாளென்றால், அக்கம் பக்கத்தார் பேச்சைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை அல்லவா? மறைமுகமாகக் கர்ப்பத்தைச் சிதைக்கச் செய்த முயற்சி அவள் சிசுவுடன் அவள் உயிரையும் தொலைத்தது. பாழும் சமூகக் கட்டுப்பாட்டால், இவ்வுலகில் வாழவேண்டிய இரு உயிர்கள் மாண்டன. அவள் மரணம் என் மனத்தில் திடீரென ஒரு மாற்றத்தை உண்டுபண்ணியது. அவளது தியாகம் எனக்கு வாழ்வில் வெறுப்பைத் தந்தது. முற்றும் துறந்த துறவியாக ஊர் ஊராகச் சுற்றி வருகிறேன். எந்த க்ஷேத்திரத்துக்குச் சென்று தரிசித்தாலும் மன நிம்மதியடையவில்லை. தலைவிரி கோலமாய் லட்சுமி என் கண் முன்னே சதா காட்சியளிக்கின்றாள். லட்சுமி போன்ற கணக்கற்ற அபலைகளின் துயர் என்று துடைக்கப்படும்?

மறுமண நீதி

(M. K சுதன், நேமத்தான்பட்டி)

(ஆனந்தக்களிப்பு)

மாதர் மறுமணஞ் செய்ய—இந்த
மானிலத் தாரொரு மைப்படவேண்டும்
சாதலையே எதிர்நோக்கும்—நம்
(1) சகோதரி யார்சஞ்ச லம் தீர்க்கவேண்டும். (மாத)

சின்னஞ் சிறுகிளி யேபோல்—உள்ள
சேயிழை தன்னை மணந்தோன் மறைந்தால்
பின்னுமவர் மணம் செய்தே—உயிர்
(2) பேணில் புவியது ஏற்க வொண்ணாதோ? (மாத)

பாவைதனைக் கொண்ட நாதன்—பத்
தாறு வருடங்கள் வாழ்ந்தன னேனும்

பாரி யிறப்பளே யாயின்—மறு
(3) பாவைதனைக் கொளல் தான் முறையாமோ? (மாத)

ஆண்களுக் கோர் நீதியென்றும்—அவர்
அண்மையுள பெண்ணுக் கோர் நீதியென்றும்
காண்பதுதான் நீதியாமோ—இரு
(4) கண்ணைப் பிரிவினை செய்திடலாமோ? (மாத)

கண்ணை யுறுத்து நோய்தோன்றில்—அதைக்
கண்டுகளைய மனம் எண்ணுமன்றோ
பெண்ணை வருத்தும் விதவை—யெனும்
(5) பேரைக் களைவதற் கெண்ணுமை நன்றோ? (மாத)

கண்ணில் இடம் வலமென்றே—இந்தக்
காசினி மானிட ரெண்ணுதலுண்டோ?
பெண்ணினம் தம்மை வருத்தும்—பெரும்
(6) பேதமை தானொழிந் தேகுதலென்றோ? (மாத)

பெண்ணைச் சிறுமைசெய் தேசம்—அது
பெற்றியுடைத்தாகு மோமிக நாசம்
கண்ணைப் படைத்த பெரியீர்—இதைக்
(7) கண்டு திருத்திடற் கேதான்முனைவீர்

நாதனிழந்திட்ட நங்கை—அவள்
நல்லுருதன்னை நலிந்திடச் செய்யீர்
ஓதும் மறுமண நீதி—உணர்ந்
(8) தோலமிடும் விதந்தானோர்க் கருள்வீர்? (மாத)

பாண்டவர் தம்மை யீன்றாள்தான்—இந்தப்
பாரில் விதவையென் றுனவளன்றோ?
மீண்டும் புருடனைக் கூடிப்—புவி
(9) மீதுசந்ததியுண் டாக்கினளன்றோ? (மாத)

கால வழியதுநோக்கி—இளம்
கைம்பெண் கவல்தனைத் தீர்த்திடவேண்டும்
ஞாலத்தவரே நன்றோர்ந்து—இந்த
(10) நல்லபணிசெய முன்வர வேண்டும். (மாத)

சௌந்தரவல்லி

(C. N. விகடன்)

பெயரைப் பார்த்ததுமே, வைஷ்ணவ சம்பிரதாயமா யிருக்கிறதல்லவா? எங்கள் ஊரில் அநேகர் சைவர்களே. அப்படியிருந்தும், திருக்கோஷ்டியூர், திருநாராயணபுரம் முதலிய சில ஊர்களிலிருந்து, இங்குவந்து போகும் சிலர்கள், எங்களூர் பெண்களிடம் விஷ்ணுவைப்பற்றிப் பிரமாதமாகக் கூறி மிகுந்த பிரேமையை ஏற்படுத்தி விட்டார்கள். அதனால் சில பெயர்கள் 'இப்படி ஏற்பட்டு விட்டன. "அழகு" என்ற சுத்தத் தமிழ் "சௌந்தரம்" என்ற வடமொழியைத் தழுவியது. பல வைஷ்ணவர்கள் எங்களிடம் வந்து ஆசீர்வதிப்பது போல், வைஷ்ணவ குலப்பெண்களும் எங்கள் பெண்களிடம் வந்து ஆசீர்வாதம் செய்து அவர்கள் மணிப்ரவாள நடைகளை எங்களிடையே சர்வ சாதாரணமாகப் புழங்கும்படி செய்து விட்டார்கள். இப்பொழுது, நாங்கள் விழித்துக் கொண்டதால், வரவர அவர்கள் எங்களிடம் நெருங்குவதில்லை.

சிறு வயதில் நானும் அவளும் ஓடிவிளையாடினோம். ஒன்றாகப் படித்தோம்; சாப்பிட்டோம்; பிரியாமலிருந்தோம்; எனக்கு அவள் மீது அதிக ஆசை. உலகம் என்றால் என்னவென்று தெரியாத நாங்கள், ஒருவரை யொருவர் கல்யாணம் செய்துகொள்வதாகச் சிறு பிராயத்திலேயே நிச்சயம் செய்துகொண்டோம்! ஊரார்கள் கூட எங்கள் ஒற்றுமையைக் கண்டு சந்தோஷப்பட்டனர். எனக்கு வயது 13 ஆகும் போது அவளுக்கு வயது பத்து. இந்தச் சிறு ஜோடியைக் கண்டு பலர் குதூகலம் அடைவர். ஆனால், அச் சிறுவர் உலகத்திலும் எங்கள் மீது பல சிறுவருக்குக் கோபம் பொறாமை. ஏன்? சௌந்தரமும் நானும், மனமொத்தால் தான் பிறருடன் பேசி விளையாடுவோம். இப்படியே வெகு காலம் நாங்கள் இருந்து வந்தோம்.

சென்னையில் இருந்த என்னுடைய மாமன் என்னை சென்னையில் படிக்கவைக்க வேண்டுமென்று கூட்டிச் சென்றதால், நான்

சௌந்தரத்தைப் பிரிய நேர்ந்தது. அதுபற்றி வாய்விட்டும், மனம் கலங்கியும் மூன்று நான்கு நாள் அழுதுகொண்டிருந்தேன். எல்லோரும் என்னைச் சமாதானப் படுத்தினர். கடைசியில் நான் சென்னைக்குச் சென்றேன். சுமார் ஐந்தாறு வருஷங்கள் சென்னையிலே கழித்தேன். அப்படிக் கழித்தேனே யாயினும், அவள் உருவம் என் மனத்தை விட்டு அகலவில்லை. கெம்பீரமான அவள் முகமும், திரண்டுருண்ட கைகால்களும், சுருண்டடர்ந்த கூந்தலும், புன் சிரிப்பும், என் முன் நர்த்தனமாடிக் கொண்டிருந்தன.

இப்படியிருக்கும் நாளில், எனக்கு ஒரு கல்யாணப் பத்திரிகை வந்தது. அதில் சௌந்தரத்திற்கும் ரங்கநாதனுக்கும் விவாகம் என்று அச்சடித்திருந்தது. ஆ! ரங்கநாதன்! துஷ்டன்! அவனையா? சௌந்தரமா? கல்யாணமா? ஹா! எல்லாம் என்னுடைய நெஞ்சைப் பிளந்தன! என் மூளையைக் குழப்பிற்று! இக்கல்யாணத்தை நான், என் கண்ணால், பார்ப்பதா? எனக்கு எவ்வளவு ஆத்திரம் பீறிக்கொண்டு வந்தது என்பதே எனக்குத் தெரியாது. அக்கல்யாணப் பத்திரிகையைக் கிழித்து மென்று கீழே துப்பிவிட்டேன்! எனக்கு பலஹீனம் ஏற்பட்டு விட்டது. உடல் நலன் குன்றிவிட்டது. எழுந்து நடக்கக் கூட சக்தியில்லை. சதா அவள் ஞாபகம்! பால்ய விளையாட்டுகளின் சிந்தனை! இப்படியே மன நிம்மதியின்றி வருஷங்கள் பல கழிந்தன. நானும் விவாக மில்லாது நாளைக்கடத்தினேன். இப்பொழுது எனக்கு வயது 32 ஆகிறது.

சமீபத்தில் ஒரு கடிதம் வந்தது. ரங்கநாதன் இறந்துவிட்டான். சௌந்திரம் விதவையானாள் என்று அதில் கண்டிருந்தது. இந்தக் கடிதம் கண்டதும் எங்களூருக்குப் புறப்பட்டு வந்துவிட்டேன். இப்பொழுது சௌந்தரத்தைப் பார்க்கமுடியாது. விதவையாய் வீட்டினுள் அடைபட்டிருக்கிறாள். அவள் தாயார் அலர்மேலு, கடுமையான குணம் உடையவர். தகப்பனாரோ பெரிய சீட்டாடி!

ஃ ஃ ஃ

சித்ரா பௌர்ணமியன்று, இரவு சுமார் 11 மணியிருக்கும். எங்கும் தண்ணொளி; இன்பமயமான இளந்தென்றல் வீசிற்று வீதியைச் சுற்றிக்கொண்டு வந்தேன். சௌந்தரத்தின் வீட்டின

ருகே வரும்போது, ஹா! என்னவென்று சொல்வேன்! வெள்ளைக் கலையுடுத்த கலைமகள்! என்னுள்ளத்தைப் பிய்த்துப் பிடுங்கி என்னைச் சித்திரவதை செய்யும் மோகனங்கி! என்னைப் பைத்தியமாக்கிய சௌந்தரம் அங்கு நின்றிருந்தாள்! ஹா! சௌந்தரம்! என்று உளறினேன்! அவள் தாரை தாரையாக நீர் சொரிந்தாள்! நானும் அழுதேன்! பேசுவதற்கு வாய் வரவில்லை. அழுது கொண்டே பிரிந்தோம். நான் தைரியமாயிருக்கிறேன். சமூகத்தில் என்னைப்பற்றி எவராவது பேசினல் அவன் பல்லை உடைத்து விடுவேன்! ஆனல் சௌந்திரம் என்ன செய்வாள்? அவள் பணக்காரி! படித்தவள்! எல்லா விஷயங்களும் தெரிந்தவள். உலக அனுபவம் வாய்ந்தவள். சீர்திருத்த உணர்ச்சி நிறைந்தவள். அவள் இப்பொழுதும் படித்துக்கொண்டிருக்கிருள்! ஆனல் சமூகத்திற்குப் பயப்படுகிருள்! அவள் மனதுவைத்தால் தடைகளை தகர்த்தெறியலாம். மூடத்தனங்களை விரட்டி விரட்டி யடிக்கலாம். உலகத்தில் ஆண்—பெண் விரும்பும் காதலிலே அவள் ஈடுபட்டு என்னை மணக்கலாம். காதலிருக்கிறது; பணம் இருக்கிறது. ஆனல், ஆனல்! சமூகம்! பயம்! கட்டுப்பாடு, இவைகளைக்கண்டு அவள் அஞ்சுகிருள்! நானே அவளை எண்ணி எண்ணி மெலிகிறேன். எனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. அவள் மனம் தைரியம் அடைந்தால், என் பித்தம் தெளியும். அந்நாளை எதிர்பார்க்கிறேன்.

லீலா சங்கர்

(அம்புலிமான்)

வானம் சீறுகிறது. வையம் நடுங்குகிறது. மானிலத்தில் மக்கள் நடுக்கமுற்றனர். சோவென்று மழை பொழிகின்றது. தரையெல்லாம் சேறும் வதியுமாக காணப்படுகின்றது. இரவு பத்து மணியிருக்கும். காற்று விர் விர்ரென்று வீசுகின்றது; மரங்களின் பேரிரைச்சல் சொல்லுந்தரமன்று.

இப் பயங்கரமான நள்ளிரவில் ஓர் பெரிய மாடி வீட்டின் பின்புறம், துன்பகரமான—ஆனல் இனிமை ததும்பிய கானம்

கேட்கின்றது. கூர்ந்து கவனித்தால், ஒரு பெண் தன் விதியை நினைத்துப் புலம்புவது புலப்படும்.

அதற்கடுத்த வீடு காலேஜில் வசிக்கும் சங்கரனுடையது. அவன் மாடியிலிருந்து, லீலா புலம்பும் காட்சியைக் கண்டான். இள மனம் இளகிற்று.

லீலாவைப்பற்றி அவனுக்கு நன்ருகத் தெரியும். அவள் ஓர் பால்ய விதவை. இதை அவள்கூட அறியமாட்டாள். அவ்வளவு இள வயதில் மணமுடித்து, மணாளனை யிழந்தாள். இப்பொழுது, பருவகால உணர்ச்சியால் தூண்டப்பட்டு, வெட்கத்தை விட்டு, கல்யாணம் செய்யும்படி தாயாரை வற்புறுத்தினுள். இதுநாள் வரை தாயார் ஏதேதோ சாக்குப்போக்குகள் கூறிவந்தாள். ஆனுல் அன்று முடிவாக, அவள் விதவை யென்றும், கலியாணமே செய்துகொள்ளக் கூடாதென்றும் கூறிவிட்டாள். அபலை அழுவதைத் தவிர வேறென்ன தெரியும்? இன்று அவள் பெற்ரோர்கள் சினிமா பார்க்கப் போய்விட்டார்கள். அவள் தனிமையில் இருந்து, துன்பத்தை ஆற்ருது அழுது புலம்புகின்ருள்.

சங்கரன் ஓர் கயிற்றின் வழியாக இறங்கினுன். இதற்கு முன் அவளுக்கும், அவனுக்கும் பழக்கம் உண்டு.

"லீலா! ஏன் புலம்புகிருய்?" என்ருன்.

லீலா திடுக்கிட்டாள். ஆனுல் சங்கரனைக் கண்டதும், முகத்தில் புன் முறுவல் தோன்றிற்று. "சங்கர்! நீ அறியாததல்லவே? ஆமாம். நீ இங்கு எப்படி வந்தாய்?" என்ருள் மடந்தை.

யுவன் புன்னகை பூத்தான். லீலா அவன் தோள்மீது சாய்ந்தாள். இருவரும் உள்ளே சென்றனர். அவளுக்கு ஓர் தைரியம். வீட்டில் ஒருவரும் இல்லை "என் அன்புக்குகந்த நேசன் சங்கர். அவனுடன் இன்ப மநுபவிப்பதில் என்ன தவறு". அவனுக்கும் அவள்மீது பிரியம்தான்!

ஜிலு ஜிலுவென்று காற்று ஜன்னல் வழியாக அவர்கள் மீது மோதிற்று. காதலர் ஒருமித்த காதல் சுகம் அனுபவித்தனர்.

இது அன்றைய விஷயம். இப்பொழுது சர்வ சாதாரணமாகி விட்டது. சினிமா பித்துக்கொண்டு அவள் பெற்ருேர்கள் அடிக்கடி செல்வது அவர்களுக்கு அநுசரணையாக விருந்தது.

நாட்கள் கடந்தன. மாதங்கள் பல சென்றன. லீலாவிற்கு மறைக்க முடியாத தோற்றம் ஏற்பட்டது. இதை அறிந்த அவள் தாய்க்கு அடிவயிற்றில் நெருப்பைப் போட்டது போல் இருந்தது.

லீலாவிற்குச் சொல்ல முடியாத துக்கம். தாய் கமலாட்சியின் வசைமொழிகள் ஒருபுறம். தந்தை சோமநாதம் கூறும் பேச்சுகள் ஒருபுறம். இத்தனைக்கும் தம் காதலனைக் கண்டு பேச முடியாமை ஒருபுறம். எல்லாம் சேர்த்து அவளை வதைத்தன. பேதை என்ன செய்வாள்?

மீண்டும் கடுமழை. அன்றிரவு சுமார் பதினொரு மணியிருக்கும். தன் உயிரைப் போக்கிக்கொள்ள சித்தமானாள் லீலா. மெல்ல கதவை திறந்துகொண்டு, வெளியேறினாள். தான் எங்கு செல்கிறோம் என்பதறியாமல் மனம் போனவாறு நடந்தாள்.

கடைசி முடிவு. குற்றாலம் நீர்வீழ்ச்சிக்கு வந்து சேர்ந்தாள். மின்னல் ஒளியில் தோன்றும், சலனமற்ற தண்ணீர் அவளுக்கு மனச்சாந்தியை யளித்தது. மழை ஓய்ந்தும் தூவானம் விடவில்லை. களைப்பு மேலிட்டது. நடந்துவந்த உடல் சோர்வுற்றது. சக்தி யற்று, நனைந்த மணற் பரப்பில் சாய்ந்தாள்.

அதிகாலை ஐந்து மணியிருக்கும். நேர்மையற்ற இந்து சமூகத்தை நினைத்து வருந்தி கனவு கண்டிருந்த அவள் நித்திரையினின்றும் தெளிந்து உட்கார்ந்தாள். அதன் மேல் செய்வதறியாது விழித்தாள். இங்கு இருந்தால் ஆபத்து நேரக்கூடும் என அஞ்சி மீண்டும் நடந்தாள். எவ்வளவு தூரம் சென்றாளென்று சொல்லமுடியாது. கால்கள் ஒன்றோடொன்று பின்னின. பசியும், தாகமும் அதிகரித்தன. நடுக்கானகத்தில் தவித்தாள். அப்பொழுது மத்தியானம் சுமார் 12 மணியிருக்கும். ஓர் மரத்தினடியில் படுத்தவள் அயர்ந்து நித்திரையாகி விட்டாள்.

கஷ்டத்தின் மேல் கஷ்டம் லீலாவிற்கு. இத்தனை கஷ்டங்களுக் கிடையே பிரசவ வேதனையும் தொடர்ந்தது. அனாதையாகக் காட்டில் வந்து அவதிப்படுவதை விட, ஏன் நேற்றே தற்கொலை செய்து கொள்ளவில்லை எனத் தோன்றிற்று. இப்பொழுது எழுந்து

நடக்கவும் சக்தியில்லை. உதவி செய்வதற்கும் ஆள் நடமாட்டமே காணோம். பாவம் என்ன செய்வாள்?

மாலை மணி ஏழு ஆயிற்று. அழகான ஆண்குழந்தையொன்று காணப்பட்டது அவளருகில். அது வீச் வீச் சென்று கதறிற்று. லீலா அதை மார்போடு அணைத்துக் கொண்டாள். அங்கு சுத்தம் செய்வதற்கும் துணையில்லை. பசிக்கொடுமையோ தாங்க முடியவில்லை. ஆதரிக்கவோ ஒருவருமில்லை. நடக்கவோ சக்தியில்லை. குழந்தை முகத்தைப் பார்க்கப் பார்க்க தற்கொலை என்னும் ஞாபகமே மறைந்து விட்டது.

குழைந்தையின் இரைச்சல், அருகிலுள்ள மலையில் மோதி எதிரொலி செய்தது. குளிரினால் அவதிப்படும் லீலாவிற்கு அதை அடக்கக்கூட சக்தியில்லை.

குழந்தையின் பேரொலியைக் கேட்டு, அம்மலையின் மீது கூடாரமடித்து இருந்தவர்களில் இருவர் ஒலிவந்த திசையை நோக்கி இறங்கிவந்தனர். அவர்கள் கையில் "டார்ச்" லைட் இருந்தது. ஆலமரத்தினடியில் பிணம் போல் ஓர் இள நங்கை கிடப்பதும், அருகில் குழந்தை கதறியழுது கொண்டிருப்பதுமான காட்சியைக் கண்டதும் அவர்கள் உள்ளம் குமுறிற்று.

அதில் வாலிபமும் அழகும் உடையவனாகக் காணப்பட்ட யுவன், யுவதியின் முகத்தைப்பார்த்ததும் திடுக்கிட்டான். விவரிக்க முடியாத மனோவேதனைகள் ஏற்பட்டன. உடனே அவளை அவன் எடுத்துக்கொள்ள, அவன் நண்பன் குழந்தையை எடுத்துக் கொண்டு மலை மீதேறினர். சடுதியில் முகாம் அடித்திருக்கும் கூடாரத்தினுள் வைத்து அவளுக்கு மூர்ச்சை தெளிவுபடுத்தினர். மூர்ச்சை தெளிந்த லீலாவிற்கு, நல்ல ஆகாரம் கொடுக்கப்பட்டது. அதற்குள் குழந்தைக்கும் பாலூட்டி சுத்தம் செய்து கொண்டு வந்தான் நண்பன்.

ஆகாரம் சாப்பிட்ட சில மணி நேரம் கழித்துத்தான் தன் சுய உணர்வு பெற்றுள் லீலா. கண்ணைத் திறந்து பார்த்ததும் சங்கரனைக் கண்டாள். பேராச்சரியம் கொண்டாள்.

சங்கரன் காலேஜ் விடுமுறையை முன்னிட்டு, உல்லாச யாத்திரையாகப் பல நண்பர்களோடு புறப்பட்டு வந்தான். அன்றிரவு இம்மலையில் அனைவரும் "காம்ப்" செய்திருந்தனர். லீலா தற்செயலாகக் காப்பாற்றப்பட்டாள். லீலாவின் குடும்ப சேதியறிந்து மிகவும் வருத்தப்பட்டான் சங்கர். ஸரஸ்வதி போன்ற வதனம் படைத்த சிறு குழவியை மார்போடு அணைத்தான்.

ஃ ஃ ஃ

மறுநாள் குற்றாலத்தில் லீலாவிற்கும், சங்கரனுக்கும் ரிஜிஸ்தர் விவாகம் செய்துகொள்ளப்பட்ட செய்தி, சோமநாத முதலியாருக்கு அனுப்பப்பட்டது. காலேஜ் நண்பர்கள், குழந்தை பிறந்த பின்னர் சிலரைப்போன்று உதறித்தள்ளிவிடாது பகிரங்கமாக மணம் புரிந்துகொள்ள முன் வந்த சங்கரனின் வீரத்தைப் பாராட்டினர்.

மகளைக் காணாது வருந்திக்கொண்டிருந்த சோமநாத முதலியார் ஏதோ ஒரு விதத்தில் சுபமாக முடிந்ததைக் குறித்து சந்தோஷப்பட்டார். அதோடு பால்ய மணத்தின் தவறும் பின் விதவா விவாகத் தடையின் தீமையும் தென்பட்டது. கமலாட்சியம்மையாருக்குமட்டும் ஏதோ மன அதிருப்தி யிருந்தது. ஆயினும் முதலியார் தம் ஊரிலேயே, 'லீலா சங்கர்" என்ற பெயருடன் ஓர் மாளிகை கட்டி, அதில் புதுத் தம்பதிகளின் வாழ்க்கையை ஆரம்பித்துவைத்தார். இப்பொழுது விதவா விவாகத்தை ஆதரித்துப் பலமான பிரசாரம் செய்துகொண்டிருக்கின்றனர்.

மாதருக்கு விடுதலை

(ஸ்ரீமதி கமலாதேவி)

உலகம் முழுவதிலும், சமூகச் சட்டமானது பெருமாற்றம் அடைந்து வருகிறது. மிகப் பெரிதாக வளர்ந்து வருகிறது. பழய சமூகக் கட்டுக்குள்ளே ஊடுருவிப் பாய்ந்து செல்கின்றது. காரணம் மிகத்தெளிவானது தான். நமது பொருளாதாரக் கட்டுக்

கோப்பு மிகவும் ஆட்டம் கொடுத்துவிட்டது. அதன் எதிரொலி நமது சமூக வாழ்க்கையிலும் பிரதிபலிக்கின்றது.

இந்தியாவும் மாற்றமடையா திருக்கவில்லை. பழைய இந்தியா மாறிப் புது இந்தியா தோன்றுகிறது. சமூகக் கொள்கைகள் மிகக் கடுமையானவை. அவற்றை மாற்றியமைப்பது எளிதல்ல. ஆனால் காலம் நமது பழைய கட்டுப்பாடுகளைத் தகர்த்து வருகின்றது. மேனாடு தனது சொந்தக் கொள்கைகளையும், வழக்கங்களையும் உருவகப்படுத்தி வந்திருக்கிறது. விஞ்ஞானம் புதிய உலகங்களையும், தோற்றங்களையும் திறந்துவிட்டிருக்கிறது. பழைய நாகரீகத்தின் ஆணி வேரில் யந்திரம் தனது பெரிய வக்ரதந்தத்தைப் பாய்ச்சிவிட்டது.

நடப்பிலிருக்கிற பழக்க வழக்கம், சட்டம் இவற்றோடு காலத்தின் தேவை அடிக்கடி முரண்படுகிறது. ஒழுங்கான முறையில் இரண்டையும் சரிப்படுத்தாவிட்டால், அதனால் துன்பமும் வேதனையும் ஏற்படுகின்றன. நம்பிக்கை ஏற்பட்டால் தான் வாழ்வு சாத்தியமாகிறது. ஆனால் இந்த நம்பிக்கை, மூட நம்பிக்கையாகவும், அறியாமையாகவும், வெறும் சமூகக்கொடுங்கோலாகவும் மாறினால், அரசாங்கம் தலையிட்டு, நிலைமையை நேர்படுத்த வேண்டியது அவசியமாகும்.

உலகத்தில் ஒரே குழப்பம். விடுதலை, சுதந்திரம் என்ற ஜனநாயக சக்திகள் மேலோங்கி, தாழ்த்தப்பட்டவர்கட்கும் சுரண்டப்பட்டவர்கட்கும் அதிக நிவாரணத்தை அளித்துவந்தன. ஆனால், திடீரென இச்சக்திகள் முன்னேறவொட்டாமல் தடுக்கப்பட்டிருக்கின்றன. எதிர்ப்பு சக்திகள் மீண்டும் வெளிக் கிளம்பிவிட்டன. அரை குறையாக விடுதலை பெற்றவர்கள், மீண்டும் பழைய, இருட்டறைக்குள் செல்லும்படி வற்புறுத்தப்படுகின்றார்கள்.

தொழிலாளர், கிருஷிகர் இயக்கங்களைப் போன்று, மாதரியக்கமும் சத்தி வாய்ந்ததுதான். ஒரு காலத்தில், அடிமை அடிமையாகவும் எஜமான் எஜமானாகவும் இருக்கலாமேயன்றி இருவரும் எக்காலத்தும் சரிசமமாக இருக்க முடியாதென்ற நம்பிக்கை யிருந்தது. அதே மாதிரிதான் ஆடவனும். அவனுக்கு எதுவும் செய்யலாம். வாழ்க்கையின் எண்ணற்ற துறைகள் அவனுக்காகவே

திறந்திருந்தன. அவன் விரும்பினால் போதும், நினைத்தது கிடைக்கும்! ஆனால், அந்தோ! பெண், வெறும் பெண்தான். சமையல் செய்யவும், குழந்தை பெறவும், எல்லாவற்றிற்கும் மேலாக மனைவியாயிருக்கவுமே அவள் பிறந்தாள்! அவளுக்கு வாழ்க்கையில் வேறு லட்சியமில்லை. பிறந்தது முதல், இறப்பது வரை அவள் மனைவியாயிருக்கவே பயிற்றுவிக்கப்பட்டாள். எந்தவிதமான உரிமையும், பாத்தியதையும் அவளுக்குக் கிடையாது. பின் அவளுக்கெதற்கு படிப்பு, அறிவு எல்லாம்? வேறு எந்தவிதமான உபகரணந்தான் எதற்கு? மனைவியாயிருப்பதால் மட்டும், இந்த உலக வாழ்வு மட்டுமல்ல, மறு உலக வாழ்வுகூட நிச்சயப்படுத்தப்பட்டதல்லவா?

ஆனால் வாழ்க்கைச் சக்கரம் நிற்காது சுற்றிக் கொண்டிருக்கிறது. புழுக்கூட திரும்பிவிடும். நீண்டகாலம் ஒடுக்கப்பட்டுவந்தவர்கள், பயம், மூடநம்பிக்கை பண்டைய வழக்கம் ஆகிய தூக்கத்தினின்றும் ஒரு நாள் விழித்துக் கொள்கின்றார்கள். பயத்தை உதறித் தள்ளுகின்றார்கள். ஏன்? அவர்கள் இருதயத்திலே ஒரு புது நம்பிக்கை பிறக்கிறது. விரைவில் ஒரு ஞான விளக்காக மாறி, அவர்களுடைய நல்வாழ்வுக்கு வழிகாட்டிச் செல்கின்றது.

மத்திய, மாகாண சட்டசபைகள் முன்பு வந்திருக்கும் பல மசோதாக்கள் காலத்தின் அறிகுறியாகும். நமது சமூகக்கொள்கைகளெல்லாம் மாறிவிட்டன. புதிய சட்டங்கள் தேவைப்படுகின்றன.

சட்டப்படி பெண்களுக்கு ஏற்பட்டுள்ள உரிமைக் குறைபாடுகள் முதலில் கவனிக்கப்படத் தக்கவை. ஸ்ரீமதி சுப்பராயனுடைய பலதார மணத்தடை மசோதாவும், டாக்டர் தேஷ்முகியின் விவாக ரத்து மசோதவும் குறிப்பிடத்தக்கவை.

காதலைத் தீய்த்த கட்டுப்பாடு

(V. R. சந்திரன், பினங்கு)

புலிவனம் என்னும் கிராமத்து மிராசுதாரரான தரும பூபதி முதலியாரும், அவரது மனைவி குணபூஷணி அம்மாளும், புத்திர சந்தான மில்லாமல் பெரும் மனக்கவலையுற்று பல தானதருமங்களைச் செய்துவந்தனர். சில மாதங்களுக்குப் பிறகு குணபூஷணி அம்மாள் ஓர் பெண்மகவை ஈன்றாள். குழந்தை பிறந்தது என்றதும் அவ்வூர் வாசிகளெல்லோரும் சந்தோஷக் கடலில் ஆழ்ந்திருந்தனர். ஜோசியர்களும் இது தான் சமயமென்று நல்லதிசை, குழந்தைக்கு வயது 100 என்று கூறித் தக்க வெகுமதிபெற்றுச் சென்றனர்.

குழந்தைக்கு ராஜாமணி என்று பெயரிட்டார்கள். ராஜாமணிக்கு ஒன்பது வயதாகும் போது குணபூஷணி அம்மாள் ஓர் ஆண்மகவையும் ஈன்றாள். தாய்தந்தையர்கள் தங்களருமைக் குழந்தை ராஜாமணிக்கு பக்கத்து ஊர் மிராசுதாரரான ராமகிருஷ்ண முதலியாரின் 11வயது குமாரன் சுப்ரமணியனுக்கு மணமுடித்தார்கள். கலியாணம் நடந்த மூன்றும் மாதம் அந்தோ! சுப்ரமணியன் பள்ளிக்கூடம் போகும் போது விஷந்தீண்டி இறந்தான். ராஜாமணியின் தாய் தந்தையர்கள் இதைக்கண்டு ஆறாத்துயர முற்று மகளை சொந்த ஊருக்கு அழைத்துச் சென்றனர். ஒரே பெண்குழந்தையானதால் ஹிந்து சமூகச் சடங்குப்படி அலங்கோலப் படுத்தாமல் பக்ஷமுடன் பராமரித்து வந்தார்கள். ஆண்டுகள் பல கடந்தன.

ஃ ஃ ஃ

தரும பூபதி வீட்டிற்குப் பக்கத்து வீட்டில் வசித்துவந்த குமாரசாமி படையாச்சியின் குமாரன் ராமநாதன் தனது 25 வது வயதில் சென்னையில் எம். ஏ. பரீக்ஷையில் முதன்மையாகத் தேறி தனது சொந்த ஊரான புலிவனத்திற்கு வந்து சேர்ந்தான். பேரழகன்; பெரிய சீர்திருத்தவாதி. சதா பொது ஜனங்களுக்குச்சேவை செய்வதே தனது கடன் என்று எண்ணுபவன். அன்னவன் ஒரு நாள் உலாவி வருவதற்குத் தன்வீட்டுத் தோட்டத்திற்குச் சென்று

அங்கிருந்ததோர் நாற்காலியில் அமர்ந்து தன் கையில் இருந்த 'மாதர் மறுமணம்' பத்திரிகை ஒன்றை வாசித்துக் கொண்டிருந்தான். சுமார் 6-30 மணி இருக்கலாம். கதிரவன் அஸ்தமித்து விட்டான். நிலா பால் போல் பிரகாசிக்க ஆரம்பித்தது. திடீரென ராமனாதன் புன்முறுவலுடன் ஆழ்ந்த யோசனையில் மதிமயங்கி விட்டான். ஏன்? ராஜாமணி தற்செயலாய் பக்கத்துத் தோட்டத்துக் கிணற்றில் ஜலமெடுக்க வந்தவள் ராமனாதனைக்கண்டு தன் மனதில் ஏதோ எண்ணியவாறு ஸ்தம்பித்து நின்றாள். ராமனாதன் இதைக் கவனிக்கவும் ஒருவர் கண் மற்றொருவரைச் சந்திக்கவும் காதல் செடியை மனதில் ஊன்றிச்சென்றனர்.

கண்ணொடு கண்இணை நோக்கொக்கின், வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல (குறள்.)

நாளடைவில் ஓர் உயிரும் ஈருடலும்போல் பழக வாரம்பித்து விட்டார்கள். இது இவ்வாறிருக்க, தரும பூபதி முதலியார் தனது மகன் முத்து கிருஷ்ணனுக்கு, மணம் செய்ய அவனது அபிப்பிராயத்தைக் கேட்பதற்காகக் காத்துக்கொண்டிருந்தார். முத்து கிருஷ்ணனும் ஓர் சீர்திருத்த வாதி. பலவிடங்களுக்கும் போய் நம் இந்தியாவில் பெண்கள் அடிமைகளான தேன்? பெண்களும் ஆண்களுக்குச் சமமானவர்களே என்று அடிக்கடி பிரசங்கங்கள் செய்து வருவான். மேலும், ராமனாதனின் ஆப்த நண்பன் பள்ளிக் கூடத்திலிருந்து வீட்டிற்கு வந்தான்.

தருமபூபதி:- குழந்தாய்! எனக்கோ வயது முதிர்ந்துவிட்டபடியால் உனக்குக் கலியாணம் செய்து என் கண்களால் பார்க்க ஆவல் கொள்கிறது என் மனம். அதற்கான ஏற்பாடுகளும் செய்து வருகிறேன். இவ்விஷயத்தில் உன் அபிப்பிராயம் என்ன?

முத்துகிருஷ்ணன்:—தந்தையே! தந்தையின் சொல்லைக் காப்பாற்றாதவன் தனயனாகான். ஆதலால் தங்களின் சொற்படி கலியாணம் செய்துகொள்ளுகிறேன். ஆனால், முதலில் என்னினும் வயது முதிர்ந்த எனது தமக்கைக்கு திருமணத்தை முடியுங்கள்.

இதைக்கேட்ட தருமபூபதி முலியார் கண்களில் நீர்பெருக ஒன்றும் பேச நாவெழாமல் அங்கிருந்ததோர் சோபாவில் சாய்ந்தார். தன் நாதன் இப்படி வருந்தியதைக் கண்ட குணபூ

ஷணி அம்மாள் என்ன நடந்ததென்று தன் மகனைக் கேட்டாள். அவனும் நடந்ததை நவின்றான்.

குணபூஷணி:—மைந்தா! ராஜாமணிக்குப் பத்து வயதாகும் போதே மணம் செய்து வைத்தோம். அடுத்த மூன்றும் மாதம் விதவையானாள்.

முத்துகிருஷ்ணன்:—அம்மா! இது என்க்கு இவ்வளவு நாள் தெரியாதே. அதனால் என்ன? இனியாகிலும் மறுமணத் திற்கு வேண்டிய ஏற்பாடு செய்யுங்கள்.

குணபூஷணி:—என்ன மறு விவாகமா? அவள் தலைவிதியை எண்ணி வருந்திக்கொண்டிருக்கும்போது புண்ணில் ஊசியால் குத்துவதுபோல் மேலும் மேலும் அதிகம் படுத்தாதேயம்மா.

முத்துகிருஷ்ணன்:—போதும்! போதும்!! நிறுத்துங்கள். தங்களைப்போல் தலைவிதி என்று எண்ணுவதால் நம் நாட்டில் பல் கோடி விதவைகள் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கிறார்கள். இனியாகிலும் பாலிய மணத்தை நிறுத்தி, விதவையான குழந்தை களுக்கு விமோசனமளியுங்கள்.

தருமபூபதி:- (மூர்ச்சை தெளிந்து) மறு விவாகம் நம் மரபி னருள் இதுவரையிலும் நடந்ததே கிடையாது. நாம் முதலில் செய்தால் நம் சுற்றத்தார்கள் நம்மை ஜாதிப் பிரஷ்டம் செய்து விடுவார்கள். இவ்விஷயத்தில் எனக்கும் அபிப்பிராயமில்லை. நீ எவ் வளவு சொல்லியும் நான் கேளேன்.

இப்பேர்ப்பட்ட மதி யிழந்தவர்களிருந்தால் நம் நாடு எப்பொ ழுது சுதந்திர நாடாகும் என்று எண்ணியவாறு முத்து கிருஷ் ணன் போய்விட்டான். இது இவ்வாறிருக்க ராமனுதனின் தாய் தந்தையர்கள் ராமனுதனுக்குக் கலியாண விஷயமாக யோசனை செய்துகொண் டிருக்கும்போது ராமனுதன் காப்பி சாப்பிட வந் தான்.

குமாரசாமி:-மைந்தா! உனக்குக் கலியாணம் செய்ய ஏற்பாடு செய்துள்ளோம். இவ்விஷயத்தி லுனது அபிப்பிராயமென்ன? பெண் எங்கு பார்ப்பது?

ராமனுதன்:-தந்தையே! தங்களிஷ்டப்படி கலியாணம் செய்து கொள்ளுகிறேன். நான் விரும்பும் பெண் அடுத்த வீட்டு ரா-ஜா-ம-ணியே.

குமாரசாமி:-ராஜாமணியா? முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவது போலல்லவா இருக்கிறது உன் எண்ணம்! அவரோ இவ்வூர் மிராசுதார். மேலும் அவள் ஓர் விதவை. அதை விடுத்து வேறு ஏதாவது கூறு.

ராமனுதன்:-தாங்கள் எவ்வாறு கூறினும் நான் கேளேன். எனக்கு மணம் செய்வதாய் இருந்தால் ராஜாமணியையே செய்யுங்கள். இல்லையேல் வேண்டாம். அவளையன்றி நான் வேறு எவளையும் மணக்க இசையேன். நானும் அவளை வெகு நாட்களாகக் காதலித்துவருகிறேன். இது சத்தியம்.

குமாரசாமி படையாச்சிக்கும் ஒரே குழந்தையாதலால் தன் மகனுக்கு எப்படியாவது மணமுடித்துவிட வேண்டுமென்று தருமபூபதி முதலியாரிடம் சென்முர்.

தருமபூபதி குமாரசாமியை உபசரித்தார்.

குமாரசாமி:-தங்களிடம் ஒரு முக்கிய காரிய நிமித்தம் வந்தேன். ஆனுல்........

தருமபூபதி:-என்ன! தயக்கமின்றிக் கூறும். சாத்தியமாகக் கூடிய விஷயமாயின் தடையின்றிச் செய்துவைக்கிறேன்.

குமாரசாமி:-என் மகனுக்குக் கலியாணம் செய்ய ஏற்பாடுகள் செய்தேன். ஆனுல், அவன் ராஜாமணியை வெகுநாட்களாகக் காதலித்து வருகிறுனும். ஆகையால் கலியாணம் செய்துகொண்டால் அவளைத்தவிர வேறு யாரையும் மணம் செய்துகொள்வதில்லை என்று சத்தியம் செய்துவிட்டான். ஆதலால் தாங்கள் தயைகூர்ந்து இவ்விஷயத்தில்..................

தருமபூபதி:-என்ன தெரிவித்தீர்? உம்மை சரிசமானமாய் வரவேற்றதே மகா பிசகு. நீர் என்ன குலம்? நான் என்ன குலம்? நீர் எவ்வகையில் என்னைப்போல் சமமானவர்? இவ்வளவு வார்த்தையை வேறு யாராவது தெரிவித்திருந்தால்.......? உடனே வெளியில் போய்விடும்.

குமாரசாமி:—முதலியாரே! நான் கடைசியில் தெரிவிப்பது யாதெனில் தாங்கள் என் மகனுக்குத் தங்கள் குமாரத்தியை மணம் செய்விக்காவிடில், காதலர்கள் மனம் சிதறுண்டு வீண் பழிக்குள்ளாவது நிச்சயமென்றறிவீர்.

தருமபூபதி இதைக்கேட்டு மகா கோபாவேசத்துடன் தன் மகளிடம் சென்றூர்.

தருமபூபதி:—நான் உன்னை ஓர் விதவை என்றும் பாராது மற்ற பெண்களைப் போல் நகையணியவும், பூ முடிக்கவும் இடங் கொடுத்துப் பக்ஷமுடன் பராமரித்து வந்ததற்கு நீ இப்படிச் செய் வாய் என்று நினைத்திருந்தால் அப்பொழுதே............

ராஜாமணி:—தந்தையே நான் அப்படி ஒன்றுந் தவறுதலாய் நடக்கவில்லையே.

தருமபூபதி:—நம் பக்கத்து வீட்டு வாலிபனைத் தெரியுமல் லவா?

ராஜாமணி:—ஆம் தந்தையே நான் அவரை நன்கறிவேன். அவரும் என்னை அவரது பெற்றோர்களின் அனுமதியின் பேரில் மணம் செய்து கொள்வதாய்ச் சொல்லியிருக்கிறூர். நானும் அவரை மனப்பூர்வமாகக் காதலிக்கி...........

தருமபூபதி:—என்ன? காதலிக்கிறுயா, காதல்? நீ ஓர் விதவை என்பதை அறியாயோ? குடியைக் கெடுக்க வந்தக் கோடரிக் காம்பே. தலை விதியால் கணவனை இழந்த விதவைக்கு மறு விவாகமா? நீ இதைப்பற்றி இன்னொருமுறை பேசினுல்........? நாளை முதல் இந்த வெள்ளைப்புடவையைத்தான் உடுக்கவேண்டும். நகைகளை எல்லாம் கழற்றிவிடவேண்டும். வீட்டை விட்டு வெளி யே போகக்கூடாது. மீறிப்போனுல் என் கோபாக்கினிக்கு இரையாவாய்.

இதைக்கேட்ட ராஜாமணி மிக்க துயரத்துடன் தன் காதலன் ராமனுதனைச் சந்தித்து விஷயத்தைத் தெரிவிக்க இருவரும் விஷ முண்டு உயிர்விடத் தீர்மானித்தனர்.

ராஜாமணி தன் தந்தைக்குக் கீழ்க்கண்டவாறு கடிதம் ஒன்று எழுதி வைத்துவிட்டு, இருவரும் விஷமருந்தி உயிர் நீத்த

னர். ராஜாமணியின் குடும்பத்தினர் அன்னவளைக் காணாது எங்குந் தேடி, கடைசியில் பக்கத்துத் தோட்டத்தில் தம்பதிகளின் சவத்தைக்கண்டு கதறினர்கள். தருமபூபதி முதலியார் அங்கு கிடந்ததோர் கடிதத்தை யெடுத்துப் படிக்க வாரம்பித்தார். அதில் அடியில் வருமாறு வரையப்பட்டிருக்கிறது:

அன்புமிக்க தந்தையே!

மணக்கோலத்தில் எங்களைப்பார்த்து மகிழவேண்டிய நீங்கள் பிணக்கோலத்தில் எங்களைக் காணுங்கள். ஒத்த பண்புடைய ஒருவனை ஒருத்தி காதலிப்பது இயற்கையின் நியதி. அந்தோ! இதற்கு நேர்மாற்றமாக உங்களின்—இல்லை சமூகத்தின் நீதியற்ற அபவாதத்திற்கு அஞ்சி நாங்கள் இறுதியாகிய விடுதலைத் துறையை நாடுகிறோம். களங்கமற்ற, புனிதத் தன்மையுடைய எங்கள் காதலைத் தீய்த்த கட்டுப்பாடே! வருங்காலச் சீர்திருத்த சண்டமாருதத்தில் நீ, சிதைவுறுவது நிச்சயம்! நிச்சயம்!! தந்தையே! சமூகமுமே! உங்கள் நேர்மையற்ற கட்டுப்பாட்டின் பிரதிபலன் இதுதானா?

இப்படிக்கு
அபாக்யவதி, ராஜாமணி.

இக்கடிதத்தை வாசித்த முதலியார் தனது மூடத்தனத்தை எண்ணி வருந்திக்கொண்டிருந்தார். தன் ஆப்த நண்பனும், சகோதரியும் இறந்த காரணத்தைத் தெரிந்த முத்துக்கிருஷ்ணன் தன் தந்தையின் அறிவில்லாமையைக் கண்டித்து தன் சொந்த விவாகத்தையும் வெறுத்து பொதுஜனங்களுக்குச் சேவை செய்வதே முதற்கடமை என்று வெளிக்கிளம்பிவிட்டான். தனது மகளின் மரணத்தையும் மகனின் பிரிவையும் கண்ட முதலியாரும் அவரது மனைவியும் தங்கள் சொத்துக்களைப் பொது ஜன சேவைக்காக எழுதிவைத்துவிட்டு நாளடைவில் இறந்தார்கள்.

"இளமைதந்தாய் உணர்வுதந்தாய் இன்பங்காணும்
இன்னுயிரும் தந்திட்டாய் இயற்கைத் தேவி
வளமையற்ற நெஞ்சுடையார் இந்நாட்டார்கள்
மறுக்கின்றார் காதலினைக் கைம்மை கூறித்
தளைமீறவலி யில்லேன்! அந்தோ என்றன்
தண்டமிழின் இனிமையைப்போல் இனிய சொல்லான்
உளமாரக் காதலித்தான் என்னை! அன்னோன்
ஊர்நிந்தை ஏற்பதனைச் சகிப்பேனோ நான்!"

—பாரதிதாசன்.

:: நிகழ்ச்சிகள் ::

விதவா விவாகம்

ராஜமந்திரம் சுவர்ண சத்திரத்தில் மே 10௳ பிராமண வகுப்பைச் சேர்ந்த ஒரு விதவைக்கு ஆந்திர மாகாண ஸ்திரீ புனர் விவாக சகாய சங்கத்தின் சார்பில் மறுமணம் நிகழ்த்தப்பட்டது. எல்லப்பிரகத சத்யநாராயணராவும், ஸ்ரீமதி பால திரிபுரசுந்தரியும் தம்பதிகள். 300 பேர் விஜயஞ்செய்து சிறப்பித்தனர்.

காங்கிரஸ் தலைவர்

பெல்லாரி (ஆந்திரா) ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவராக ஸ்ரீமதி எலிஸபெத்தம்மா (இந்திய கிறிஸ்தவர்) என்ற பெண்மணி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

ஸ்ரீமதி இந்திரா நேரு

ஏப்ரல் 15௳ பிற்பகலில் 'ஸ்டிராத்தார்டு' என்ற கப்பலில் ஸ்ரீமதி இந்திரா நேரு ஐரோப்பாவுக்குப் பிரயாணமானார்.

காந்தி பேரனுக்குக் கலப்பு மணம்

மகாத்மா காந்தியின் பேரனும், ஸ்ரீ ஹரிலால் காந்தியின் புதல்வனுமான ஸ்ரீ காந்திலால் காந்திக்கும் திருவிதாங்கூர் ஸ்ரீ ஜி. ராமசந்திரன் (நாயர் வகுப்பு) குடும்பத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி சரஸ்வதிக்கும் எப்ரல் 24௳ ராஜ்கோட்டில் திருமணம் நடந்தது.

பெண்கள் பாங்கு

ஆம்ஸ்டர்டாமில் ஒரு புது பாங்க் திறக்கப்பட்டிருக்கிறது. அதில் பெண்கள் மட்டும் பிஸினஸ் செய்யலாம். பெண்களால், பெண்கட்காக மட்டும் நடத்தப்படும் பாங்கு இது. இதில் வேலை பார்ப்போர், நிர்வகிப்போர் அத்தனை பேரும் பெண்கள்தான்.

63-க்கு 15!

63 வயதுள்ள திருநெல்வேலி அட்வகேட் ஸ்ரீ வி. வி. சீனிவாசாச்சாரியாருக்கும், ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த 15 வயதுப் பெண்ணுக்கும் மதுரையை யடுத்த திருமுகூரில் மணம் நடக்கவிருந்ததை மதுரை காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ வைத்தியனாதய்யரும் மற்றோரும் சேர்ந்து, கேட்டுக்கொண்டதன் மேல் மணம் நடத்தாமல் தடைபட்ட விவரம் சென்ற இதழில் வெளியாகி யிருக்கிறது. ஆனால், மே முதல் தேதியன்று, இதே கல்யாணத்தைப் பாளையங்கோட்டைக்குச் சமீபமுள்ள நாரணம்மாள்புரத்தில் ரகசியமாக நடத்திவிட்டதாக இப்பொழுது தெரிய வருகிறது.

வரதட்சிணை ஒழிப்பு

வரதட்சிணை முறையை ஒழித்தும், பெண்களை விற்பதை ஆட்சேபித்தும் ஐக்கிய மாகாண சட்டசபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேறிவிட்டது.

ஸ்திரீகளுக்குச் சர்வகலாசாலை

பிருந்தாவனத்தில் (சாம்பரான்) காந்தி சேவா சங்க மகா நாட்டுப் பந்தலில் ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தி தலைமையில் நடை-

பெற்ற ஸ்திரீகள் மகாநாட்டில், அடுத்த காங்கிரஸுக்கு ஸ்திரீகள் தொண்டர் படை யொன்றைத் திரட்டிப் பயிற்சி அளிக்கவேண்டுமென்றும், ஸ்திரீகளுக்கென ஒரு சர்வகலாசாலை ஸ்தாபிக்கவேண்டுமென்றும், தொழிற் கல்விக்கும் அங்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

ஸ்திரீ புரொபஸர்

மிஸ் டொரோதி ஆன்னி கராட் என்பவர் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் புராதனச் சின்ன ஆராய்ச்சி புரபஸராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இதற்குமுன் ஸ்திரீகள் எவரும் இக்கலாசாலையில் புரொபஸராக நியமிக்கப்பட்டதில்லை.

சாரதா சட்ட வழக்கு

கீழக்கரை ஜனாப் யம். யம். யஸ். ஷாகுல் ஹமீத் சாரதா சட்டப்படி அறுவர்மீது வழக்குத் தொடர்ந்திருக்கிறார். மகமத் ஆவியாள் (மணப் பெண்), ஷேக் அப்துல் காதர்(மாப்பிள்ளை), பெண்ணின் தாயார், புரோகிதர் இருவர்; இன்னொருவர் எதிரிகள். பெண்ணுக்கு வயது பதினொன்று தான் என்று அவர் குறிப்பிட்டார். மே 17-ந் தேதிக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

நாயர் மாதர் மகாநாடு

காவியூரில் நடைபெற்ற நாயர் மாதர் மகாநாட்டில், திருவனந்தபுரம் மாதர் கல்லூரிப் பண்டிதை ஸ்ரீமதி பி. ஆனந்தவல்லி அம்மா தலைமைவகித்துப் பேசியது வருமாறு:-"சமூக, அரசியல், சட்டத் தடைகளையெல்லாம் அப்பால் தள்ளிக்கொண்டு மேனாட்டு மாதர்கள் முன்னேறி வருகிறார்கள். துருக்கிப் பெண்கள் தங்கள் முக மூடியைத் தூர எறிந்துவிட்டனர். ஜப்பானியப் பெண்கள், வீட்டினுள்ளே அடைபட்டிருந்ததை விட்டு வெளியில் வந்து எல்லாத் துறைகளிலும் புகுந்துவிட்டனர். இந்தியப் பெண்கட்கும் ஒரு நல்ல சந்தர்ப்பம் வாய்த்து விட்டது. மகாத்மா காந்தியின் சுதந்திரப் போர், நமக்கு ஒரு அரிய சந்தர்ப்பத்தைத் தந்திருக்கிறது."

ஸ்திரீயின் தீரம்

ஜபல்புரியிலிருந்து 26 மைல் தூரத்திலுள்ள கோஷால்பூர் கிராமத்தில் ஒரு சௌக்காரின் வீட்டிற்குள் ஆயுதபாணிகளான கொள்ளைக்காரர்கள் வந்ததும் சௌக்கார் மனைவி விழித்தெழுந்தாள். கொள்ளைக்காரர்கள் கூச்சலிட்டால் அவளை சுட்டுக்கொன்றுவிடுவதாக பயமுறுத்தினர். ஆனால் அந்த ஸ்திரீ அஞ்சாமல் கூச்சலிட்டு அருகிலிருந்த கொள்ளைக்காரர்களைப் பிடித்துவிட்டாள். சௌக்கார் தம்மிடம் தயாராக வைத்திருந்த துப்பாக்கியை எடுத்துக் கொள்ளைக்காரரைச் சுட ஒரு கொள்ளைக்காரன் காயமுற்றான். கொள்ளையரில் மற்றவர்கள் பயந்தோடிவிட்டனர். காயம்பட்ட கொள்ளைக்காரனை கிராமவாசிகள் பிடித்துவிட்டனர். சௌக்காரின் மனைவி தனது தைரியத்தால் தனது கணவனது உயிரையும் சொத்தையும் காப்பாற்ற முடிந்தது.

சமூக சீர்திருத்தப் புத்தகங்கள்.

"மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு சகாயம்.

கைம்பெண்ணின் கண்ணீர்.

இது ஆசிரியர் கே. வி. எஸ். வாஸ் அவர்களால் எழுதப்பட்டு மாதர் மறுமண சகாய சங்கத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. இதில் விதவைப் பெண்கள் படுந்துயரமும் அதற்குச் செய்யவேண்டிய பரிகாரமும் தெளிவு படக் கூறப்பட்டுள்ளன. விதவா விவாகம் சுருதி-யுக்தி- அனுபவபூர்வமாக ஒப்புக்கொள்ளப்பட்டதென்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இக்கட்டுரை முதலாவது பரிசு பெற்றதாகும். விலை அணா ஒன்று. தபாற் செலவு வேறு.

மான நஷ்ட வழக்கு.

இது பெண்ணுக்குப் பணம் வாங்கிச் செய்ததற்காக பெண்ணின் தம்பி மைனர், மேஜரான பிறகு தன் குடும்பத்திற்கு அவமானம் வந்துவிட்டதென்று கோர்ட்டில் வழக்கிட்டு நீதிபெற்றதாக எழுதப்பட்ட ஒரு சிறு நூல். கோர்ட் நடவடிக்கையும் மலைவிழுங்கி முத்தப்ப செட்டியாரின் விசாரணை விவரங்களும் தீர்ப்பும் படிப்பவர்க்கு வெகு உற்சாக மூட்டக் கூடியன. விலை அணா ஒன்று. தபாற் செலவு வேறு.

சொர்னவல்லி.

இதில் அடுத்தாள் வேலையின் அவஸ்தை, பிரிந்த காதலர்களின் பெருந் துன்பம், தீர்த்த யாத்திரைக்குப் பெண்கள் சென்று படும்பாடு, பச்சிளம் பெண்கள் விதவையராக்கப்படும் கஷ்டங்கள் முதலிய பகுதிகளும், விதவைப் பெண் வைக்கும் ஒப்பாரியும் படிப்பவர் உள்ளத்தை உருக்கிவிடுவது திண்ணம். உபந்யாசங்களும் மேற்கோள்களும் சந்தர்ப்பத்துக்கேற்ற இனிய பாட்டுக்களும் நிறைந்து விளங்கும். எளிய அழகான நடையில் அமைந்துள்ளது. இதன் விலை ரூ. 1—0—0. "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு மட்டும் 0—12—0. தபாற் செலவு வேறு.

அமிர்தவல்லி மாலை.

இது நகரத்தார் பெருமையையும் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பையும் விளக்குகிறது. பால்யப் பெண்களை மணம் செய்வதும் அதை விதவையாக்கிக் கண்ணீர் வடிப்பதும் எவ்வளவு கொடுமை யென்பதையும், அதனா லேற்படும் இன்னல்களையும் படிப்பவர் மனத்தில் பசுமரத்து ஆணிபோல் பதியச் செய்யும்படி அமைந்துள்ளது. யாவரும் எளிதில் பாடக்கூடிய இனிமையான அம்மானைப் பாட்டில் பாடப்பட்டிருக்கிறது. விலை 0—4—0. "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு மட்டும் 0—3—0. தபாற் செலவு வேறு

மானேஜர், மாதர் மறுமணம் ஆபீஸ், காரைக்குடி.

REGD. NO. M. 3603.

சிறந்த புத்தகங்கள்.

மாதர் மறுமணப் பாடல் திரட்டு.

இது ஒரு சிறந்த பாடல்புத்தகம். இதில் 27-பாடல்கள் அடங்கியுள்ளன. இலக்கியப்பாடல்களும், புதுவகையான மெட்டுப் பாடல்களும் நிறைந்திருக்கின்றன. 64-பக்கமுள்ள இப் புத்தகத்தின் விலை இரண்டணுதான். தபாற்கூலி வேறு.

ஜீவகாருண்யத் திருக்குறள்.

"வள்ளுவர் பாட்டின் வள முரைக்கின் வாய்மடுக்கும்" என்று புகழப்படும் திருக்குறளிலிருந்து ஜீவகாருண்ய சம்பந்தமான 20 குறளைப் பொறுக்கிப் பெரிய எழுத்தில் பொழிப்புரையுடன் அச்சிடப் பட்டிருக்கிறது. பள்ளிக்கூட மாணவர் பயில்வதற்கு மிக இன்றியமையாதது. விலை அணு அரை. மொத்தமாக வாங்கினல் விலை சகாயமாகத் தரப்படும். தபாற்கூலி வேறு.

மாதர் மறுமணம்.

இப் பெயர்கொண்ட அழகிய புத்தகம் மகிபாலன்பட்டி திருவாளர் மு. சின்னையா செட்டியாரவர்களால் இயற்றப்பெற்றது. அழகான நடை. நகரத்தார் சமூகத்திற்கு மாதர் மறுமணம் எவ்வளவு அவசியமென்பதற்குக் காரணங்களைப் பசுமரத்தாணியெனப் பதியும்படி எழுதியிருக்கிறார்கள். உதாரணமாகக் கூறப்படும் ஏழு கதைகள் வியக்கத்தக்கனவாகும். அழகான புத்தகம் விலை 0—4—0 "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு 0—3—0. தபாற் செலவு வேறு.

காசில்லாமல் உபதேச.

பஞ்சாட்சர உபதேசம் செய்வதற்கு ஆடம்பரமும் அனுவசியமான தடபுடலும் வேண்டியதில்லை யென்பதற்கு வேண்டிய காரணங்கள் இதில் விளக்கப் பட்டிருக்கிறது. அதோடு தண்ணீர் மந்திரமும் இதில் சொல்லப் பட்டிருக்கிறது. விலை அணு ஒன்று. தபாற்கூலி வேறு.

மாதர் மறுமண பென்ஸில்

"விதவை மணமே விடுதலை அளிக்கும்" என்னும் வாக்கியம் தமிழிலும் ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டுள்ள அழகான பென்சில். நல்ல நிறம். சுகமாக எழுதக்கூடியது. இந்தியாவில் செய்யப்பெற்றது.

விலை பென்சில் 1-க்கு	0—0—6
டஜன் 1-க்கு	0—5—0
குரோஸ் 1-க்கு	3—6—0

தபாற்செலவு வேறு.

Printed and Published by S. MURUGAPPA for the Mathar Marumana Sahaya Sangam at Kumaran Power Press, Karaikudi.
Editor: M. Maragathavalli.